சரஸ்வதி தோத்திரம் இலவச இணைப்பு

# ஞானக்கதிர்

அன்பு—அறநெறி—ஆன்மீகம்



விலை ரூபா-5/=

புரட்டாசி '88

# மில்க்வைற்

## சவர்க்காரத் தொழிலகம்

" திருக்கோயிலைத் தினமும் வழிபடுங்கள்,
திருமுறையைத் தினமும் ஓதுங்கள்,"

25 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி பஞ்சபுராணத்திரட்டுப் புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

525/2, காங்கேசன்துறை வீதி,
த.பெ.இல. 77,
யாழ்ப்பாணம்.

"மில்க்வைற்"

**தரமான கலர்ப்படப்பிரதிகள்**

★ அதிகுறைந்த கட்டணத்தில்
★ மிகக் குறுகிய காலத்தில்

**கலர்ப்படச்சுருள் கழுவுதல்
முற்றிலும் இலவசம்**

★ நவீன கம்பியூட்டர்
இயந்திரத்தில் பிரதி செய்தல்
3 முதல் 5 நாட்களில்
விநியோகம்

**ஷப்ருவை** நாடுங்கள்

ஷப்ரு நிதி நிறுவனம்
207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 22073




ஞானசித்தம்

ஞானம்:1 சுக்கில புரட்டாதி செப். — அக். 1989 கதிர்: 5

# நவராத்திரியில் ஞானஒளி

திருச்சிற்றம்பலம்

ஆதி சிவனுடைய சக்தி — எங்கள்
அன்னை யருள் பெறுதல் முக்தி -- பாரதியார்

அண்ட சடாசரங்கள் யாவும் இயங்குவதற்கு ஆதாரமாக இருப்பது சக்தி. உறுதுணையாவது ஆற்றல். அண்டங்களினதும், அங்கு வாழும் சீவ ராசிகளினதும் இயக்கத்துக்குக் காரணமும், காரியமுந் தேவை. இவை விஞ் ஞானக் கோட்பாடுகள்.

அவற்றுக்குச் சமாந்தரமாக, மெஞ்ஞானத்தில், எமது சைவசமயத் தில் சிவனையும் சக்தியையும் உருவகித்துள்ளனர். காரியம் சிவன்; அதற்குக் காரணமாக அமைபவள் சக்தி. ஐந்தொழிலுக்கும் ஐந்துவிதமுற்று நிற் கிறாள் சக்தி.

ஆதலால், சக்தியின் ஆற்றலும், மகிமையும் அளவிடுவதற்கு அரியன. சக்தியை மறந்தால் வாழ்வில்லை; வளமும் இல்லை. அவள் அருள் வேண்டி நோற்கப்படும் விரதங்களில் நவராத்திரி சிறப்புடையது.

ஆற்றல், செல்வம், அறிவு ஆகிய மூன்றையும் வேண்டி நவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. வாழ்க்கைக்கு வலுவூட்டும் வீரத்தை, திண்ணிய நெஞ்சத்தை, துர்க்கையிடம் வேண்டித் துதிக்கிறோம். தீதில்லாத செல்வத்தை, சகல வகைப் பொருட் செல்வங்களையும் ஈந்து அருளுமாறு இலட்சுமியிடம் இறைஞ்சுகிறோம். தெளிந்த நல்லறிவை, ஆயகலைகள் அறுபத்து நான்கினை யும் நல்கவல்ல துறைதோய்ந்த கல்வியை, ஞானத்தை அருளுமாறு நலங் கொள் வாணியை வேண்டுகிறோம்.

ஆணவம், அறியாமை, மிருகத்தன்மை ஆகியவற்றை ஒழித்து, ஆன்ம ஞானம் பெற்றுய்ய சக்தி வழிபாடு துணை செய்யும் என்ற கருத்தே நவராத் திரி விரதத்தின் உள்ளடக்கம்.

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வவடிவம் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே!

-- செவ்வேள்.

திருச்சிற்றம்பலம்.

நவராத்திரி கவியரங்கு

# வாணியை வேண்டுகிறேன்



சந்தனப் பொற்சிலம்பில் பிறந்தவளே!
சாகாத வரமெல்லாம் அளிப்பவளே!
கந்தனுக்கும் கவியார்வம் படைத்தவளே!
காவியங்கள் யாவற்றிற்கும் நாயகியே
சுந்தரனும் பிரம்மாவின் பத்தினியே
சுடர்விளக்காய் நாவினிலே நிற்பவளே
செந்தமிழை வளர்த்துநிற்க சக்திதன்னை
செறிந்திடவே வாணியை வேண்டுகிறேன்

சீதனங்கள் இந்நாளில் தேவைதானு?
சீர்வரிசை பெண்வாழ்வை சிதைக்குதன்றே?
ஆதனங்கள் உள்ளோரின் 'தடிப்பு' வாழ்க்கை
ஆரவாரம் ஏழைநெஞ்சில் துன்பம்தானே
காதலையும் பாசத்தையும் எடையுப்போட்டு
காணிகளில் மனிதன்தன்னை எடையும்பார்க்கும்
சோதனைகள் தமிழருக்கு இனியும் வேண்டாம்
சுந்தரியாம் வாணியை வேண்டுகிறேன்.

—திருமதி . N . இராஜப்புஸ்பவனம்

✶

கையினில் வீணையை ஏந்தியே நல்ல
கல்வியைத் தந்தெமைக் காப்பவளே
மெய்யாக வேயுனை வேண்டுதல் செய்திடும்
விரதிகள் உன்னிடம் வேண்டுவது
பொய்யான புகழல்லப் போகமும் அல்லவே
பொன்னிகர் உன்கழல் பாதங்களே
வெய்ய வினையெலாம் வெந்துமே சாம்பலாம்
வேல்விழி யாளுனை வேண்டுகிறேன்.

கம்பன் அழைத்திட வந்தாய்
காளி தாசனை ஆண்டாய்
நம்பினர் யாரையும் காத்து
நலமுற வாழச் செய்தாய்
இம்ப ருலகினில் உன்போல்
இடரினைக் காப்பவ ரில்லை
வம்புநாண் மலரினைச் சூடி
வாயார வாழ்த்தினேன் வாணி.

— திருமதி தெ. செல்வராசா

## நெடும் புகழ் தாராய்

முந்தையர் தமக்கு நல்ல
முதிர்சுவைக் கலைகள் தந்தே
இந்நிலம் சிறக்க வைத்த
இன்கலை வாணித் தாயே
வந்தனை புரிகின் றேனே
மனமலர் தனில மர்த்தி
சிந்தனை செய்யா தென்றும்
நெடும்புகழ் தாராய் தேவி!

பூவினில் உறைந்தே இந்தப்
பூவுளோர்க் குதவும் நீயென்
நாவினில் வந்த மர்ந்து
நலங்கொள் கவிதை தந்து
மேவிடு புகழால் என்றும்
மேதினி போற்ற வைத்து
மாவிருள் போக்கி மேலாம்
மனமதில் ஒளியே தாராய்

- கவிஞர் பொலிகை ச. திருப்பதி -

★

## பூரணி! சுமங்கலி

நாரணி செந்திரு என்கையிலே சுவி
நாதம் பிறக்குது வீணையிலே
பூரணி சுமங்கலி என்சையிலே சக்திப்
புவனம் தெரியிது ஒளியினிலே

- செல்வி ச. விமலா -

## ஒரு வரம் தா

கல்வி செல்வம் வீரமென்று
கற்று மண்ணில் நாமுயர
நல்வழியைக் காட்டிவரும்
நாயகியர் மூவரையும்
உள்ளமதில் வைத்துருகி
ஒரு வரம் நான் கேட்கின்றேன்
இல்லையென்று சொல்லிடாமல்
ஏற்றுக் கொண்டருள் தருவீர்!

சகல, கலா வல்லவனாய்
சரித்திரத்தில் நாயகனாய்
அகிலமெல்லாம் கட்டியாளும்
அரச குலக் காவலனாய்
வகை வகையாய்ப் பொன்குவிக்கும்
வணிகர்குலப் புத்திரனாய்
தகைமையின்றி நானுயரத்
தரவேண்டாம் எனக்குவரம்

உண்டும் உறங்கியும் நம்மக்கள்
உருக்குலைந்து வாழ்கின்ற
துன்பம் மண்ணில் மாய்ந்திடவும்
தூய்மை வாழ்வில் மலர்ந்திடவே
தொன்று தொட்டு வாழ்ந்ததுபோல்
புகழை யீட்டி வாழ்வதற்கும்
ஒன்று மட்டும் வரமளித்தென்
உள்ளமதைக் குளிரவைப்பீர்

- செ. குணரெத்தினம் -

★

## வாணியை வேண்டுகிறேன்

காணி நிலமின்றிக் கையதனில் காசின்றி
நாணித் தலைகுனிந்து நானடிமை யாகாமல்
பேணி யெனைக்காத்து பேரருளே புரிவதற்கு
வாணியை வேண்டுகிறேன் வரமொன்று தரச்சொல்லி.

ஊமைக் குரைகொடுத்தாள் உலகிற் கொளிகொடுத்தாள்
ஆமை போலடங்கும் ஏழை மக்கட்கு
வேதனை நீக்கிநல் வாழ்வு கொடுக்க
வாணியை வேண்டுகின்றேன் வரமொன்று தரச்சொல்லி.

சூரனின் கொட்டமதை சூலத்தால் அழித்தவனை
வீரனின் வாள்வீச்சில் விளையாடு கின்றவனை
வாழ்வு தனைக்கெடுக்கும் சோம்பலினைப் போக்க
வாணியை வேண்டுகின்றேன் வரமொன்று தரச்சொல்லி.

சங்கப் புலவர்க்கு இன்பத் தமிழானாய்
திங்கள் தலைக்கணிந்த தேவன் துணையானாய்
வண்டமிழர் குறைநீக்கி வாழ்வுதனை அளிக்க
வாணியை வேண்டுகிறேன் வரமொன்று தரச்சொல்லி.

- வ. யோகனந்தசிவம் -

# ஆனந்த வல்லி அமர்ந்திருப்பாள்

சோம்பல் மிகுத்தவர் உள்ளத்தினை - அன்னை
தூளன்று தள்ளி நீத்திடுவாள்
ஓம்சக்தி மந்திர ஒலிவடிவாள் துர்க்கை
உலகம் முழுவதும் காத்திடுவாள்

பண்பு மிகுத்தவர் சிரசினிலே - அன்னை
பதமலர் சூடி அருள்புரிவாள்
அன்பு மிகுத்தவர் நெஞ்சினிலே எங்கள்
ஆனந்த வல்லி அமர்ந்திருப்பாள்.

சொல்லுக் கடங்காத வீரமுள்ளாள் - அன்னை
சோதனை வேதனை செய்திடுவாள்
கள்ளர் வஞ்சகர் கூட்டத்தினை துர்க்கை
காலனுல் வந்து கொன்றொழிப்பாள்.

வீரர்கள் தோள்களில் வீற்றிருப்பாள் - அன்னை
வேண்டிய நல்வரம் தந்திடுவாள்
தீரம் மிகுந்திடும் நாட்டினிலே துர்க்கை
சுற்றித் திரிந்து நடமிடுவாள்.

எழுகின்றுள் செங்கதிரோன் எங்கும் இன்பம்
இதயத்து வீணையிலே ஒலியை மீட்டுத்
தொழுகின்றோம் சரசுவதியைத் தாயே எங்கள்
துயர்துடைத்து நல்லறிவுச் செல்வந் தாராய்
உழுதொழிலும் கைவினையும் இன்னோ ரன்ன
உலகமெல்லாம் வியந்திடவே புதுமை சேர்ப்பாய்
பழுதுண்டோ நம்போன்ற அன்பர் நெஞ்சில்
பாதமலர் பதித்து விட்டால் ஒளியுண்டாமே.

வான்பார்த்த பூமியெனும் பழியைப் போக்க
மண்ணகழ்ந்து பாதாள கங்கை மீட்டு
மேன்மை பெறு நாடெங்கள் நாடாம் என்று
மிகுமகிழ்ச்சி கொள்வதற்கு வழியுங் காட்டு!
தேன்துளிக்கும் வெண்கமலத் தன்மம் போன்று
திகழ்அழகுக் கலைமகளே தாயே நின்னை
வான்புகழும்; மண்புகழும்; புகழின் அந்த
வண்ணத்தை நான்புகழின் நகைப்பாம் அன்றோ!

கவிஞர் . மு. மயில்வாகனம்

(சங்குவேலி இந்து இளைஞர் மன்றம் ஒழுங்கு செய்த அகில இலங்கை நவராத்திரிக் கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்ற கவிதை இது.)

# நாம மகிமை

நடுக் கடலில், நீலநிறக் கடலின் மேல் பறந்து செல்லும் பறவைக்குத் தங்குமிடம் கப்பலின் கொடிக் கம்பம் தவிர வேறில்லை. அதே போல, பிறப்பு இறப்பு என்ற கடலின் சூறாவளியில் அலைக்களிப்புண்ட மனிதனுக்கு இறைவன் தான் புகலிடம்.

பறவை எவ்வளவு தூரம் பறந்து சென்றாலும் அதன் தங்குமிடத்தைப் பற்றி அதற்கு நன்கு தெரியும். அந்த அறிவு அதற்கு நம்பிக்கையை அளிக்கிறது. அதன் மனக் கண்ணில் கம்பத்தின் உருவம் நன்கு பதிந்துள்ளது.



இறைவனின் திரு நாமமே கம்பம். திருவுருவத்துடன் அதனைத் தொடர்பு படுத்தி உருவத்தை மனக் கண்முன் இருத்திக் கொள். அதுவே இதயக்குகையில் ஒளியுமிழும் விளக்காகும்.

நாமத்தை நாவில் இருத்திக் கொள். அது அக இருளையும், புற இருளையும் விரட்ட வல்லது. நாம ஜபத்தில் ஈடுபட்டுள்ள மனிதன், நிலை பெற்ற அமைதியுடன் இருப்பான்.

உன்னிடம் உள்ள தெய்வீக உணர்வினைத் தட்டியெழுப்ப நாமஸ்மரணத்தைத் தவிர சிறந்த வழியில்லை. நாமஸ்மரணத்துடன் மற்றச் செயல்கள் அனைத்தும் புரிய முடியும். உதட்டசைவு முக்கியமல்ல, மனத் தூய்மை முக்கியமானது.

திருநாமத்தை திரும்பத் திரும்பச் சொல்லிவா. நாளடைவில் மனத்தின் அலைச்சலை நிறுத்திவிடும், மனம் ஒரு முகப்படுகிறது. மறைந்துள்ள சக்தி வெளிப்படுவதால், எண்ணங்கள் அடங்கி செயல்கள் கட்டுப்படுத்தப் படுகின்றன.

கடவுளின் திருநாமத்தைக் கூறி அதன் மூலம் இறைவனை இடைவிடாது நினைவு கூர்தல் தியானமாகும். தியானம் அலையும் மனதைச் சமப்படுத்துகிறது. மனம் அசைவற்று இருக்கும் போது உனக்கும் உண்மையிருப்புக்கும் (Reality) இடையே உள்ள திரைமறைகிறது. நீ தான் உண்மையிருப்பு என்பதை உணர்கிறாய். உனது பக்தி மிகவும் ஆழமாக இருந்தால் தான் இறைவனை இடைவிடாது நினைக்க முடியும்.

நாமத்தை இடைவிடாது உச்சரித்து வா. அது உன்னைப் பற்றிக் கொள்ளும். ஒரு குறிப்பிட்ட நிலையில் உன்னை முழுவதும் ஆட்கொள்ளும். பிறகு நீ முயன்றாலும் நாமத்தை உன்னால் மறக்கவியலாது. தேகமே தெய்வீகமாக மாறும் (ஊனுடம்பு ஆலயம்) இனி இது சாதாரண உடலல்ல, இதுவே தெய்வீக உடலாகிறது. அத்தகையவர் நடக்குமிடம் எங்கும் புனிதம் அடைகிறது.

திருநாமத்தை எந்த முறையிலும் நீ உச்சரிக்கலாம். ஆனால் அந்த நாமத்தை நீ நேசிக்க வேண்டும். அந்நாமத்தைப் புகழ்ந்து மகிமைப்படுத்த வேண்டும். அது உன்னை மனித நிலையிலிருந்து தெய்வீக நிலைக்கு ஆற்றலைக் கொண்டுள்ளது.

தொகுப்பு: சித்ரா

# சைவம் ஒரு நோக்கு

## சிவம் — சைவம்

''சைவம்'' சிவ சம்பந்தமுடையது. இஃது இந்து சமயம் என்னும் பெரும்பரப்பின் ஒரு பகுதியாகவும், அறுவகை (சண்) மதங்களுள் முதலாவதாகவும் விளங்குகிறது. சிவமே சைவத்தின் முதற் பரம்பொருள் ஆவார்.

'சிவம் என்னும் சொல், செம்மை என்னும் பண்படியாகப் பிறந்தது'. 'செம்மை' என்பதற்கு அன்பு, மங்கலம், சிறப்பு, உயர்வு என்ற பல பொருள்களுண்டு

''பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு''
(மெய்யுணர்தல் - 8)

என்பது வள்ளுவர் வாக்கு.

இத்திருக்குறள் சிவத்தோடு சைவத்திற்குள்ள தொடர்பைச் சுட்டுவதாக மட்டுமன்றி சிவனின் ஒப்பற்ற இயல்பையும் எடுத்துக் கூறுகிறது. ''செம்பொருள் காண்பது அறிவு என்பதற்கு, ''வீட்டிற்கு (ஆன்மாவின் இறுதி இலட்சியமாகிய முத்திப்பேறு) நிமித்த காரணமாய செவ்விய பொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய் உணர்வாவது'' எனப் பரிமேலழகர் பொருள் கண்டார். மேலும் தம் சிறப்புரையில், 'தோற்றக் கேடுகள் இன்மையின் நித்தியமாய், நோன்மையாய், தன்னை ஒன்றும் கலத்தல் இன்மையின் தூய்தாய்த், தான் எல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற் பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல் பற்றி அதனைச் செம்பொருள்' என்றார் எனக் குறிப்பிடுவது செம்மேனிப் பெம்மானின் எண்குணங்களை உள்ளடக்கிய விளக்கமே என்பது தெற்றெனப்புலப்படும்.

''செம்மையே, ஆய சிவபதம் அளித்த செல்வமே'' என்பது மாணிக்கவாசகர் வாக்கு. செம்மையைச் சிவப்பு என்போம். 'முகம் கோபத்தால் சிவந்தது, என்று சிவப்பு நிறத்தைக் கோபத்திற்குக் கூறுவோம். தொல்காப்பியரும், 'கறுப்பும் சிவப்பும் வெகுளிப்பொருள, எனச் சூத்திரம் செய்தார்: இதற்கொப்ப 'திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும்', வேதம் கூறும் உருத்திரனும் காணப்படுவர். உருத்திரம், கோபம், செம்மையே சிவமாய், அச்சிவமே சைவமாய்த் திகழும் பெற்றியை ஈண்டுக் கூறியவற்றால் அறியலாம்

## சைவத்தின் தொன்மை

உலக மதங்களுள் தொன்மை மிக்க ஒன்றாகத் திகழ்வது சைவம். சக்தியைப் பரம்பொருளாகக் கொள்ளும் சாக்தமும், கணபதியை முதற் பொருளாகக் கொள்ளும் காணபத்தியந்தியமும், குன்றெறிந்த குமரனுக்குரிய கௌமாரமும் சூரியனுக்குரிய சௌரமும், இன்று பெருமளவில் சைவத்துடன் அடிப்படையில் வேறுபட்டும் ஒன்றுபட்டும் விளங்குகிறது

மத ஆய்வாளர் சைவத்தின் ஆதி அறிவரிய வரலாற்றுக்கு முற்பட்ட தொன்மை நிலையை ஒப்புக்கொள்வர். அஃது ஆரியர் வருகைக்கு முற்பட்டது. மொகஞ்சதாரோ சிந்துவெளி அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப்பெற்ற இலிங்கங்கள் நடராசர் சிலை, தாய்த்தெய்வ உருவம், யோகியின் முத்திரை முதலான பல பொருள்கள் சைவத்தின் மிகப்பழைய செல்வாக்குநிலையை எடுத்துக் காட்டும். பாரதத்தின் பல பாகங்களிலும் சைவ நெறியாளர் மிகுதியும் காணப்படுவர். சிவனுக்குரிய பழம் பெரும் திருக்கோயில்கள், மேற்கு இமாலயப் பகுதியிலிருந்து அமர்நாத், கேதாரிநாத்; நேபாளத்தில் பசுபதிநாத் முதலாகத் தொடங்கி காசி, அவந்திகை, உஜ்ஜயினி, சோமநாத், ஸ்ரீசைலம் என வடக்கிலிருந்து வந்து தெற்கே காஞ்சி, சிதம்பரம், மதுரை, இராமேசுவரம், கன்னியாகுமரி முதலாகப்பல நூற்றுக் கணக்கில் ஆங்காங்கு காணப்படுகின்றன. இவை மட்டுமன்றி இலங்கை முதலாம் தெற்கிழக்காசிய நாடுகள் பலவற்றுள்ளும் எண்ணற்ற சிவாலயங்கள் இருக்கக் காண்கிறோம். காலத்துக்குக்காலம் கண்டெடுக்கப்

புலவர். கா. வேல்முருகன், B. O. L.
பகுதி முதல்வர், தமிழ்த்துறை,
மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு.

பட்ட அகழ்வுச்சான்றுகளும், புராதன பேராலயங்களும், காலவெள்ளத்தால் அழியாத கலைப்பொக்கிஷங்களும், மக்களின் சமய மரபு நெறிகளும், சைவத்தின் பழைமையைப் பறைசாற்ற வல்லன. இதற்குத் துணையாக இலக்கியச் சான்றுகளும் ஏராளம் உண்டு.

வேதம், ஆகமம் என்னும் இரண்டு திருநூல்களையுமே சைவம் முதற் பிரமாண நூலாகக் கொண்டுள்ளது. இவை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரிய மக்கள் கைக்கொண்ட சமய வாழ்வைச் சீராக்கி உயர் நிலைப்படுத்திக் கூறும் சமய இலக்கியங்கள் என்பதைவிட ''புனித சமயத்திரு நூல்கள்'' என்று கொள்வதையே வைதீகச் சைவர் பெரிதும் விரும்புவர். இவை சைவத்திற்குப் போலவே ஏனைய இந்து சமயங்களுக்கும் உரியவை. இவை சிந்துவெளிப்பண்பாட்டுக்கு முற்பட்டவை எனவும், பிற்பட்டவை எனவும் கூறுவர். கி. மு. 1500 க்குப் பிற்பட்டவை அல்ல என்பது அறிஞர் கருத்து. ஆனால் வேதங்கள் மனிதரால் ஆக்கப்படாதவை என்ற பொருளில் அவை 'அபௌருஷேயம்' என்றும், சிவனால் அருளப்பட்டவை என்றும், கால ஆய்விற்கு அப்பாற்பட்டவை என்றும் தீவிர சைவர் கூறுவர்.

வேதங்களிற் காணப்படும் மந்திரங்களும் கிரியைகளும் ஏனைய வைதீக சமயங்களுக்கு அடிப்படையாக இருத்தல் போலவே சைவத்துக்கும் இருக்கின்றன. வேதம் கூறும் உருத்திரனே சிவன் எனப் பெயர் பெற்றான் என்பர். இருக்கு வேத காலத்து ஞானிகள் உருத்திரனை ''பிஷக்தமன்'' [வைத்தியநாதன்] எனப் போற்றினர். 'ருத்திரன்' என்ற சொல் 'பாவத்தையும் துன்பத்தையும் ஓட்டுபவன்' என்ற பொருளுடைய சொல்லில் இருந்து பிறந்ததெனச் 'சாயனர்' என்னும் வேத விமரிசகர் கூறுவர். யசுர்வேதத்தில் 'பசூனாம்பதி' என்ற தொடர் உயிர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்கும் சிவனையே குறிக்கும். பவன், சர்வன், பசுபதி, சம்பு, சங்கரன், சிவன், சிவதரன் எனும் சொற்கள் யசுர் வேதத்தில் காணப்படும். ருத்திரனே ஒரே கடவுள் என்றும், அவனே ஐந்தொழில் முதலாம் அனைத்தும் செய்து, தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் இருப்பிடமாகின்றான் என்றும் சுவேதாஸ்வர உபநிடதம் உரைக்கும். வேத காலத்தை அடுத்துவரும் புராண இதிகாசகாலம் சைவத்தின் தொன்மையை எடுத்துக்காட்டும் அடுத்த சான்றாகும். இராமாயாணத்தில் வரும் சிவதனுசு, இராமனின் இலிங்கப்பிரதிஸ்டை, சிவபூசை பற்றிய செய்திகள் முக்கியமானவை. மகாபாரதத்தில் உபமன்யு முனிவரால் கிருஷ்ணன் சிவயோகம் பற்றி உபதேசிக்கப்படுகின்றான். அருச்சுனன் சிவனை நோக்கித் தவம் செய்து பாசுபதாஸ்திரம் பெறுகின்றான். இவை இதிகாச காலச் சிவவழிபாட்டை உணர்த்தும். இவற்றுடன் புராணங்கள் பெரும்பாலும் சிவ சம்பந்தமுடையனவாகும்.

வடமொழி நூல்களுக்கு இணையாகத் தமிழில் விளங்குவன தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களுமாம். தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் சிவனின் சக்தியாக விளங்கும் கொற்றவையும், அவன் திருக்குமரனாகிய முருகனும், ஏனைய வேதக் கடவுளரான வருணன் இந்திரன் முதலியோரும் குறிப்பிடப்படுகின்றனர். சங்க நூல்களாகிய எட்டுத்தொகை, பத்துப் பாட்டுக்களில் ''நீல மணி மிடற்று ஒருவன்,'' பிறவா யாக்கைப் பெரியோன்,' 'நுதல் விழிநாட்டத் திறைவன்' என்ற பல பெயர்களாற் சிவன் குறிப்பிடப்படுகிறான். திருக்குறள் முதலாம் நூல்களிலும், சங்கம் மருவிய காலத்தினவாகக் கருதப்படும் சிலப்பதிகாரம் மணிமேகலை முதலாம் காவியங்களிலும் சிவனைச் சுட்டும் பெயர்களும், சில புராண நிகழ்ச்சிகளும் காணப்படுகின்றன. 'அஷ்டமூர்த்தி' பற்றி காளிதாசனும், சீத்தலைச் சாத்தனாரும் கூறியுள்ளனர். கி பி. 3 ஆம் நூற்றாண்டின் பின்னர் ஏற்பட்ட வளர்ச்சி ''சைவ சித்தாந்தம்'' என்ற பகுதியில் அறியப்படும்.

இதுவரை கூறியவற்றாலும், கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பதஞ்சலி முனிவர் தமது பாஷ்யத்தில் சிவன், ஸ்கந்தன், விசாகன் ஆதியோர் பூசிக்கப்பட்டனர் என்ற செய்தியைக் கூறுவதிலிருந்தும், சிந்துவெளி காலத்திலிருந்து கி. பி. 3 ஆம் நூற்றாண்டு வரை, 'சைவம்' வடநாட்டிலும், டெக்கானிலும், தென்னாட்டிலும் சிறப்புற்றிருந்த வகையினை வரலாற்று ரீதியாகப் பேரறிஞர் பண்டர்கார் போன்றோர் வெளிப்படுத்துவதிலிருந்தும் சைவத்தின் பழம்பெரும் தொன்மையை உணரலாம்.

# வாழ்க்கை நிழல் நிஜம் அல்ல

ஒரு துறவி வட நாட்டுக்கு ஸ்தலயாத்திரை மேற்கொண்டார். புகைவண்டியில் ஒரு பர்ஸைக் கண்டெடுத்தார் அதன் உரிமையாளர் அவருடன் அருகில் உள்ள உறங்கல் இருக்கையில் பிரயாணம் செய்தவர். தனது பர்ஸ்தான் என்று சொல்லி அதனுள் தான் வைத்திருந்த கிருஷ்ணரின் படம் அதற்குச் சான்று என்றார். இதைப் பலசக பிரயாயாணிகள் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். அப்பிரயாணி கிருஷ்ணனின் படம் அதனுள் வைக்க வந்த காரணத்தை விபரித்தார்.

''இந்தப் பர்ஸ் எனது தகப்பனார் பல ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்ததாவும் அதற்குள் சில்லறைக் காசுகளுடன் எனது பெற்றோரின் சிறிய படங்களையும் வைத்து இருந்தேன். காலச் சக்கரத்தில் யான் திருமணம் செய்ததும் எனது அன்பு மனைவியின் படமும், பின்பு எனது ஒரே மகனின் படமும் இருந்தன.

இவனும் திருமணமாகி தூரதேசத்துக்குப் போய் என்னைக் கவனிக்காது விட்டுவிட்டான்' எனது பெற்றோர்கள் மனைவி இவர்களும் இறந்து விட்டார்கள். என்னை எல்லோரும் கைவிட்ட நிலையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் ஆதரவு எனக்கு அவசியம் வேண்டியது. இவரது படம் எனது பர்ஸை அன்று முதல் இன்று வரை அலங்கரிக்கின்றது.

எனக்கு இன்று தான் ஞானம் வந்துள்ளது. பகவானின் படத்தை ஆரம்பத்தில் வைத்திருந்தால் நான் எவ்வளவு பாக்கியம் செய்திருந்தவனாகியிருப்பேன். இதிலிருந்து என்ன தெரிகின்றது என்றால் யாவும் நிழல்'' இப்படி அவர் சொன்னார்.

இவ்வித அனுபவம் பலருக்கு வருவதில்லை எத்தனை முறை பிரசங்கம் கேட்டும், பல ஆலயங்களைத் தரிசித்தும். இந்த ஞானம் பலருக்கு எட்டுவதில்லை. இதுதான் உலகத்தின் தன்மை. பகவான் புத்தர், நோயாளி, வயோதிபர், பிணம்இவற்றைப் பார்த்த மாத்திரயே ஞானம் அடையத் துறவு பூண்டார். நாம் எத்தனையோ துன்பகரமான செய்திகளைப் படித்தும் நேரில் பார்த்தும் வாழா வெட்டியாய் இருக்கிறோம்.

உலக ஆசைகள் எம்மைப் பிய்த்துப் பிடுங்கி விட்டன, சமய சாதனைகளில் நாம் ஈடுபடவில்லை, காலம் எம்மை வாட்டிவதைக்கிறது; நாம் காலத்தால் அழிந்து விடுகிறோம். மரணம் எம்மைத் தேடிவருகிறது. ஆசையின் பலம் குறையவில்லை. ஆனல் வயது முதிர்ந்த காரணத்தால் தளர்வு ஏற்பட்டு விட்டது.

சிலர் உலகம் அநித்தியமாக இருக்குமானல், இருக்கும் வரை சகலதையும் அனுபவித்தால் என்னஎன்று கருதுகிறார்கள். புகழ்பெற்ற அமெரிக்க அறியொஞமைவாதி இங்கர்சாலும் இக்கருத்தையே வலியுறுத்தியுள்ளார்.

**-சுவாமி சித்ரூபானந்தா**

*சாரதா சேவாச்சிரமம் பருத்தித்துறை*

சுவாமிவிவேகானந்தர் இதற்கு ஒருமாறுக் கருத்துத் தெரிவித்துள்ளார். ''உலகத்தில் இருந்து உங்களை விட அதிக இன்பம் என்னல் பெறமுடியும். நான் நித்தியன், மரணத்துக்கு அப்பாற்பட்டவன். எனக்கு இவ்வுலகில் பந்தம், பாசம் மனைவி, மக்கள் இவை யாவும் கிடையா எல்லாரையும் ஒரே மாதிரி நேசிக்க முடியும். யாவரும் இறைவனின் குழந்தைகளே, உலகிடை வாழும் மக்களில் நான் கடவுளைக் காண்கின்றேன்'' ... இப்படி அவர் கர்ஜித்தார்.

ஆகையால் ஞானத்தைப் பெற்றவன் வாழ்வை நிழல் என்று கருதுகிறான். அதற்கேற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறான்.

''சிரத்தையுடையவன் பரத்தைச் சார்ந்திருப்பவன். புலன்களை வென்றவன் ஞானத்தைப் பெறுகிறான். ஞானத்தைப் பெற்று விரைவில் மேலாம் சாந்தியடைகிறான்.''

(கீதை அத் 4-39)

★

# அறிதுயிலும் ஆனந்தக் கூத்தும்

தட்பத்தின் நிறம் பச்சை. குளிர்ச்சியை விரும்புகின்றவர்கள் கண்களுக்கு பச்சைக் கண்ணுடி அணிகின்ருர்கள். படுக்கை அறையில் குளிர்ச்சியாக இருக்கும் பொருட்டு பச்சை விளக்கை எரிக்கின்ருர்கள். குளிர்ந்த பயிர் பச்சைப் பசேல் என்று காட்சிதருகின்றது.

திருமாலின் நிறம் பச்சை. பச்சை மாமலை போல் மேனி; வெப்பம் அதிகமானல் கண் சிவக்கின்றது. நெருப்பின் நிறம் சிவப்பு; சிவமூர்த்தி பவளம் போன்ற மேனியுடையவர். குளிர்ச்சியான திருமால் நீரிடைத் துயில்கின்ருர். வெப்பமான சிவம் மயானத்தில் நடிக்கின்ருர்.

திருமால் கோயிலில் தீர்த்தப் பிரசாதம் வழங்கப்படுகின்றது. சிவாலயத்தில் வெந்த வெண்ணீறு வழங்கப்படுகின்றது. தட்பமான திருமாலுக்கு சூட்டையுண்டுபண்ணுகின்ற துளசியிலையின் கஷாயத்தைத் தருகின்ருர்கள்.

பெருநோய், தொழுநோய், மஹாரோகம் என்கின்ற உஷ்ண வியாதியுடையோர் சிறந்த மஹாவில்வ இலையை அதிகாலையில் முறையே உண்பராயின் அந்நோயின் கொடுமை தணியும்.

நமது முன்னேர்கள் அமைத்த இந்த அரிய நுட்பங்களை உன்னிப் பார்த்தால் பெருவியப்புத் தோன்றுகின்றது.

மாதொரு கூறன் (அர்த்தநாரி) என்று சிவமூர்த்தியை உரைக்கின்றனர். ஒரு பாதி சிவம்; ஒருபாதி உமை.

இதுவும் முன்கூறிய உட்பொருளை உணர்த்துவதேயாகும். இதன் விளக்கம் வருமாறு;

சிவ சக்திபேதம் நான்கு.

போர் சக்தி – துர்க்கை
கோபசக்தி – காளி
இன்பசக்தி – உமை
புருஷசக்தி – திருமால்

இறுதி செய்திடலே சீற்றம் இன்பமே ஆண்மை யென்னு
அறை தரு சக்தி நான்காம் அரன் தனக் கையை காளி
முறை தரு கௌரி யின்னேர் மும்மையும் பெற்றோர் ஏனைப்
பெறலருஞ் சக்தி யான் இப் பெற்றியும் மறை கள் பேசும்

– கந்தபுராணம்.

இது திருமால் கூறுகின்றதாக அமைந்த திருப்பாடல்.

ஆகவே உமையின் ஒரு வடிவே திருமால். ஆண்கள் இடப்பக்கம் கீழ் வைத்துச் சயனிக்க வேண்டும். பெண்கள் வலப்பக்கம் கீழ் வைத்துச் சயனிக்க வேண்டும். திருமால் எல்லா

திருமுருககிருபானந்தவாரியார்உரையிலிருந்து
தொகுப்பு:
அருட்கவி சீ. விநாசித்தம்பி

இடங்களிலும் வலப்பக்கம் கீழ்வைத்துப் பள்ளி கொண்டிருக்கும் தனிமையை நோக்குமின். அதனுல் அவர் சிவசக்தி என்பது விளங்குகின்றதன்ருே?

'அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனுர்க்கே' என்கின்ருர் அப்பர்.

பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து' என்கின்ருர் திருமங்கையாழ்வார்.

'பார் யாத்வ மார்யாபதே' என்கின்ருர் சங்கராச்சாரியார்.


சிவபெருமானே தேவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறுகின்ருர். திருமாலையும் என்னையும் வேருக உரைப்பவர் என் அன்புக்குப் புறம்பானவர்கள். ஒன்ருக உரைப்பவர்கள் என் அன்புக்கு உரியவர்கள்.

உமாதேவியையும் திருமாலையும் இகழ்பவர்கள் எரிவாய் நரகிடை வீழ்ந்து இன்னல் எய்துவர்.

ஒருவன் தன்னை இகழ்ந்தாலும் பொறுத்துக் கொள்வான்; தனது அன்புக்குரிய பத்தினியை இகழ்ந்தால் பொறுத்துக் கொள்ள மாட்டான். அதுபோல், சிவமூர்த்தி தனது சக்தியாகிய நாராயணரைச் சிறிதே இகழ்ந்தாலும் தண்டிப்பார். ஆகவே சிவத்துக்கு அன்னியமாகத் திருமாலைப் பிரித்து ஓதுதல் உணர்வு ஆகாது.

தன்னை இகழ்தல் பொறுத்திடினும்
தனதில் கிழத்தி தனை இகழின்
மன்னுஞ் சீற்றம் மிகும் எவர்க்கும்
மற்றுங் கதுபோல் மாயோனை
உன்னிச் சிறிதே இகழ்ந்திடினும்
ஒறுக்கும் ஈசன் ஆதலினால்
கன்னித் துளவோன் இறைவன் எனப்
பிரித்தோதிடுதல் கடனன்றே.

– கூர்பபுராணம்



திருமுருககிருபானந்தவாரியார் அளவெட்டி கும்பிளாவளை விநாயகர் ஆலயத்திற்கு வருகை தந்த போதுஎடுத்த படம்–
**(படம் உதவி: உதயன் குருநகர் செய்தியாளர்: த. பரமலிங்கம்)**

திருமால் அறிதுயில் புரிகின்றார். அம்பலவாணர் ஆனந்தக் கூத்தாடுகின்றார். இதை நோக்க வேறு வேறு செயல்போல் தோன்றும்.

தூக்கம், ஆடல் இரண்டும் வேறு அன்று. தூக்கம் எப்போது வருகின்றது? கவலையற்ற இடத்தில் உறக்கம். முற்காலத்தில் கடன்பட்டவர்கள் உறங்கமாட்டார்கள் கடனைத் தர வேண்டுமே என்று கவல்வார்கள். இப்போது கடன் கொடுத்தவர்கள் உறங்கமாட்டார்கள்.

எனவே கவலையற்ற நிலையை உணர்த்துகின்றது திருமாலின் அறிதுயில்.

மகிழ்ச்சி மிகுந்தால் ஆட்டம். அதிக சந்தோஷம் வந்தால் ஆடுகின்றோம். களிப்பின் மிகுதியைத் தெரிவிக்கின்றது அம்பலவாணரது திருக்கூத்து.

கவலையற்ற இடமும், களிப்பு மிகுந்த இடமும் ஒன்றுதான். இருள் நீங்குவதும், ஒளி உண்டாவதும் வேறு வேறு சமயமா? இருள் நீங்கிய பின்னரா ஒளி உண்டாகின்றது? ஒளி வந்த பின்னரா இருள் நீங்குகின்றது? இல்லை: இருளின் நீக்கமும், ஒளியின் ஆக்கமும் ஒரே சமயம்தான்.

இருள் நீக்கம் போல் வேலையற்ற நிலை; ஒளியின் ஆக்கம் போல் களிப்புற்ற நிலை.

எனவே கவலையற்ற நிலையை மாயோன் திருப்பள்ளியும், களிப்புற்ற நிலையை சேயோன் திருநடனமும் நமக்கு உணர்த்துகின்றன.

திருவரங்கத்தையும் கோயில் என்ற சொல்லாலேயே கூறுவார்கள்

பொன்னம்பலத்தையும் கோயில் என்ற சொல்லாலேயே கூறுவார்கள்.

பூவுலக வைகுண்டம்–ஸ்ரீரங்கம்
பூவுலக கைலாயம் – சிதம்பரம்

இருபெருந்தலங்களுக்கும் சபை என்றுதான் பேர். அரங்கம் என்றால் சபை. அரங்கேற்று காதை என்று சிலப்பதிகாரத்தில் கூறுவதைக் கேட்டிருப்பீர்களே. புராணம் அரங்கேற்றம் என்பார்களே.

ஆகவே ஒன்று திருவரங்கம்; ஒன்று கனகசபை; இரண்டையும் பொன்னரங்கம் என்றே ஆன்றோர்கள் அழைத்துள்ளார்கள். திருவரங்கத்தில் அரங்கராஜா; ஞானசபையில் நடராஜா. மார்கழி வைகுண்ட ஏகாதசியில் திருவரங்கத்தில் சிறப்பு விழா; கனகசபையிலும் திருவாதிரையில் சிறப்பு விழா.

இரு பெருந்தலங்கட்குச் சென்று சேவிக்க மாட்டாதவர்க்குச் சிதம்பரத்திலேயே ஒரு சேரவைத்து ஒரே கும்பிடு இருவருக்கும் சேருமாறு, திருமால் பள்ளி கொண்டிருக்கவும் கூத்தப் பெருமான் திருத்தாண்டவம் புரியவும் அமைந்த அமைப்பு எத்துணை இன்பத்தைத் தருகின்றது. ஒருவர் நடராஜா, மற்றவர் கோவிந்தராஜா.


# இணுவில் பதியில் ஒரு குருகுலம்

ஏழைப் பிராமணப் பிள்ளைகளுக்கு குரு - சிஷ்ய முறையில் குருகுலக் கல்வியை நடாத்திவரும் ஒரேயொரு நிறுவனமாக இணுவில் தர்மசாஸ்திர குருகுலம் விளங்குகின்றது. அதன் அதிபர் சிவஸ்ரீ தா மகாதேவக்குருக்கள்.

இற்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாக இணுவில் கிராமத்தில் பிராமண இளைஞர் சமாசம் ஆரம்பிக்கப்பட்டது. இச்சமாசம் பிராமண சமூகத்தின் நலன்களை பேணும் வகையில் இயங்கி வந்தது. சில காலத்தின் பின் இச்சமாசம் பிராமண சமாசம் என்ற பெயர் கொண்டு இயங்கியது. பிராமண இளைஞர் சமாசம் ஆரம்பித்து இன்று வரை நடாத்திவரும் குருகுல பாடசாலைதான் இணுவில் தர்மசாஸ்தா குருகுலம்.

பிராமண சமூகத்தின் கட்டுப்பாட்டையும், பண்பாட்டையும் வளர்த்தல், இலவசக் கல்வி மூலம் பிராமணப்பிள்ளைகளுக்கு வேதசிவாகமங்களை உணர வைத்தல், ஏழைப் பிராமணப் பிள்ளைகட்கு இலவசமாக உபநயனம், தீட்சை, ஆசாரியாபிஷேகம் (குருப்பட்டம்) செய்து வைத்தல், போன்ற பல நோக்கங்களைக் கொண்டு பிராமண இளைஞர் சமாசம் ஆரம்பிக்கப்பட்டது.

இணுவில் தர்மசாஸ்திர குருகுலத்தில் பயின்ற குருமார்கள் இன்று பல குருகுலங்களை நடாத்தி வருகின்றனர். சிறு கொட்டிலில் ஆரம்பமாகிய தர்மசாஸ்தா குருகுலம் இன்று நிரந்தர கட்டடம் ஒன்றை அமைத்து இயங்கி வருகின்றது. இலண்டன் சச்சிதானந்தக் குருக்கள், மலேசியா ச. பரமேஸ்வரக்குருக்கள், நல்லூர் ச. யோகீஸ்வரக்குருக்கள் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் குருகுல ஆசிரியர் பிரம்மஸ்ரீ. நாராயண சர்மா போன்றோர் இக்குருகுலத்தில் பயின்றவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.



குருகுலத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு ஆச்சாரியாபிஷேகம் நடைபெறுகிறது.

சமஸ்கிருதபாஷை, வேதாத்யேனம் கோவில் கிரியைகள் இங்கு பயிற்றுவிக்கப்படுகின்றன. குறுகிய கால - ஆறுமாத - பயிற்சிகொடுத்து கோவில் பூசை கிரியைகள் போன்ற பிராமண தொழில் கல்வியும் போதிக்கப்படுகிறது. சுமார் முப்பது மாணவர்கள் வரை தொடர்ச்சியான கல்வியைப் பெற்று வருகின்றனர்.

அகில இலங்கைச் சிவப் பிராமண சங்கத்தினரின் சிவாச்சாரிய பரீட்சைக்குரிய பாடத்திட்டம் இங்கு கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அவர்களின் திட்டப்படி ஆகமக் கல்வியை எழுத்து மூலமாக கற்றுக்கொள்ளக்கூடிய காலம்

(32 ஆம் பக்கம் பார்க்க)

**வி. பி. சர்மா**

# இறைவற்கொருபச்சிலை

சந்திரன் கோப்பி குடித்துக்கொண்டிருந்தபோது கிணற்றடியில் இருந்து மணியோசை கேட்டது.

'கிரிஜா, மணி ஆறரை. மார்க்கட்டுக்குப் போட்டு வாறன்' என்று மனைவிக்குக் குரல் கொடுத்தபடி கூடையைத் தூக்கிக்கொண்டு கிளம்பினன்.

தினமும் சரியாக ஆறரை மணிக்கு அந்த மணியோசை கேட்கும்.

அவனுடைய வீட்டிற்கு முன்பாக, முற்றத்திற்கு அப்பால் இருக்கும் கிணற்றடியில் சிறிய அம்மன்கோயில் உண்டு. அந்தக் குடும்பத்தால் பரம்பரை பரம்பரையாக ஆதரித்து வழிபட்டு வரும் அம்மன்.

சந்திரனின் அப்பா நடேசர் தினமும் ஐந்து மணிக்கு எழும்பி, கோயிலைக் கூட்டி, மெழுகி, மூன்று குடம் தண்ணீரால் அபிஷேகம் செய்து, மலர் மாலையிட்டுப் பூசை செய்வது வழக்கம். சரியாக ஆறரை மணிக்குத் தீபம் காட்டி, மணி அடித்துப் பூசைசெய்வார்.

நாலுமுழ வேட்டியுடன் உடம்பில் திருநீற்றுக் குறியுடன், நெற்றியில் சந்தனப்பொட்டுடன் பூசை முடித்து வரும்போது அவரில் ஒரு தெய்வீகத் தன்மை ஜொலிக்கும்.

நடேசரின் மனைவி திடீரெனக் காலமான போது அவருக்கு நாற்பது வயது. சந்திரன் சிறுபிள்ளை. ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். மனைவியின் இழப்பின் பின்பு அவர் முழுக்கவனமும் சந்திரன்மேல் இருந்தது. அவனைப் படிப்பித்து முன்னுக்குக் கொண்டுவருவதே அவர் குறிக்கோளாக இருந்தது.

அம்மன் மேல் உள்ள பக்தியும், ஈடுபாடும் கூடியது. அம்மனுக்குப் பூசை செய்வதில் பெரும் அமைதியைப் பெற்ருர்.

சந்திரன் மார்க்கட்டுக்குப் போய் ஒருசில நிமிடங்களில் கிரிஜாவின் தோழி வந்தாள். அமெரிக்காவில் வசிக்கும் அவள் தன்வீட்டிற்குக் காரில் வந்ததில் கிரிஜாவிற்குப் பெரும் மகிழ்ச்சி.

அவர்கள் கதைத்துக்கொண்டிருந்த போது, நடேசர் பூசை முடிந்து வந்துகொண்டிருந்தார். அவர் வருவதைக் கண்டதும், அவரை யார்என்று அறியாத தோழி 'யாரோ பூசாரி வருகுது, தண்டலுக்காக்கும், பெரிய நியூசன்ஸ்' என்ருள்.

கிரிஜா எட்டிப் பார்த்தாள்.

வருவது அவள் மாமனர்.

அவளுக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. 'இவர் அடிக்கடி வருவார். கோப்பி குடுத்தால் குடிச்சிட்டு போயிடுவார்' என்றவள் எழுந்து போய்க் கோப்பி கலந்து கொடுத்தாள்.

இவர்களுடைய உரையாடலைப்பற்றி எதுவுமே அறியாத நடேசர் வழக்கம்போல் சாய் மனைக் கதிரையில் வந்து அமர்ந்தார். கிரிஜா கொடுத்த கோப்பியைக் குடித்துவிட்டுத் திருவாசகம் படித்தார்.

சந்திரன் மார்க்கெட்டால் வந்ததுக் கிரிஜா நடந்ததைச் சொன்னுள். 'உங்கப்பாவுக்குப் புத்தி சொல்லி இந்தக் குறியையும், பூசையையும் நிற்பாட்டுங்கோ' என்ருள்.

சந்திரன் வெளியே எட்டிப் பார்த்தான். அவர் கோலத்தைப் பார்க்கப் பூசாரிபோலத் தான் இருந்தது. 'கிரிஜா இண்டைக்கு அவருக்குச் சொல்லி இதெல்லாத்தையும் நிப்பாட்டுறன்' என்ருன்.

அன்று இரவு சாப்பாட்டிற்குப் பின் நடேசர் கந்தபுராணம் படித்துக்கொண்டிருந்தார். சந்திரன் அவரிடம் போய் அப்பா என்ருன். படிப்பதை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்து 'என்ன சந்திரா.'

'விடிய ஐந்து மணிக்குப் பச்சைத் தண்ணியில குளிச்சு வருத்தத்தைத் தேடப்போறியள். பனிக்காலம், உடம்புக்குக் கூடாது' என்

(13 ஆம் பக்கம் பார்க்க)

றான். இதைக் கேட்ட நடேசருக்கு உள்ளம் பூரித்தது. தன்னில் எவ்வளவு அக்கறை வைத்திருக்கிறான் மகன் என நினைந்து மகிழ்ந்தார். பின்பு 'எனக்கொண்டும் வராது. அம்பாள் விடமாட்டாள்' என்றார்.

'அப்பா உங்களுக்கு இப்ப அறுபத்தைந்து வயது. வருத்தம் வந்தால் டாக்டரிடம்தான் போகவேணும். அம்பாளிடம் இல்லை' என்றான்.

'நீ போய் வேலையைப் பார். எனக்கொண்டும் வராது' என்றவர் மீண்டும் கந்தபுராணத்தில் ஆழ்ந்தார்.

அடுத்தநாள் அதிகாலை ஐந்து மணிக்கு நடேசர் எழும்பினார். வழக்கம்போல் கோயிலைக் கூட்டி மெழுகிச் சுத்தம் செய்துவிட்டுக் குடத்தை எடுத்துக் கொண்டுபோய்ப் பைப்

# வில்வம் பசுபதி

## சிறப்புச் சிறுகதை

பைத் திறந்தார். தண்ணீர் வரவில்லை. மகனின் அறைக் கதவடியில் நின்று 'சந்திரா தண்ணி இல்லை மோட்டரைப் போடு, என்றார்.

இவர் கூப்பிட்டவுடன் சந்திரன் எழுந்து வந்தான். 'தண்ணி முடியவில்லை; இருக்கு, நான்தான் பூட்டினனான். விடியக் குளித்து உடம்பைக் கெடுக்காதையுங்கோ' என்றான்.

'என்ரை உடம்பு கெடாது. இருபது வருடமா செய்யுற பூசையை விடமாட்டன். தண்ணியைத் திற' என்றார்.

சந்திரனுக்குச் சினம் பற்றிக்கொண்டு வந்தது. 'இந்தப் பூசையாலை என்ன பலனைக் கண்டியள்' என்றான்.

திடுக்கிட்டுப் போனார் நடேசர். சந்திரனா இப்படிக் கேட்பது. அவர் காதுகளையே நம்ப முடியவில்லை.

'என்ன பலனா? மன அமைதி கிடைச்சது. அதைவிட வேறு என்ன வேண்டும். பத்து வயதிலை உன்தாய் இறந்தபோது இந்த உலகில் தனித்து விடப்பட்ட எனக்கு மன அமைதியையும், மனப்பக்குவத்தையும் தந்தது அம்பாள்தாண்டா. இந்த மனஅமைதி கிடைத்திராவிட்டால் உன் அம்மா இறந்ததும் நான் பைத்தியக்காரனாகியிருப்பேன்' என்றார்.

இவர்களுடைய உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த கிரிஜா கதவைத் திறந்து வெளியே வந்தாள். 'நீங்கள் போடும் இந்த வேஷத்தாலை எங்களுக்குப் பெருத்த அவமானமாக இருக்கு. தியானமும், குறியும் பூசையும் இதென்ன வீடா கோயிலா. யாரிந்தப் பூசாரி என்று கேட்டபோது எவ்வளவு அவயானமாக இருந்தது. மூன்று வேளையும் சாப்பாடு போடுறம். சாப்பிட்டிட்டுச் சும்மாயிருங்கோ' என்று பொரிந்து தள்ளிவிட்டு உள்ளுக்குள் போனாள்.

நடேசர் நிலைகுலைந்து போனார். தலையில் சம்மட்டியால் யாரோ தாக்கியதுபோல் இருந்தது. அவருக்குப் பேச்சே வரவில்லை. தொண்டையை அடைத்து ஏதோ செய்வதுபோல் இருந்தது. துக்கம் நெஞ்சை அடைக்க, கை கால் நடுங்க கையில் இதுவரை வைத்திருந்த குடத்தை நடுங்கியபடி நிலத்தில் வைத்துவிட்டு 'அம்மா, தாயே என்ன சோதனையம்மா' என்று அவர் வாய் சொன்னபோது 'கண்களில் இருந்து நீர் வடிந்தது.

அவரால் நிற்கமுடியவில்லை. அருகில் இருந்த வாங்கில் அமர்ந்தார்.

சந்திரனும், கிரிஜாவும் ஒன்றும் பேசாது உள்ளே போய்விட்டனர்.

வாங்கில் செயலற்று இருந்த நடேசருக்கு மனைவியின் நினைவு வந்தது. 'மூன்று வேளையும் ருசியாய். சமைச்சுப் போட்ட நீ போய்விட்டாய் பாவி. தனி மனம் தள்ளாடி வாடித் தவிக்குதே' என நெஞ்சுருகினார். தகப்பனாகவும், தாயாகவும் மகனை வளர்த்த நாட்களை எண்ணிப் பார்த்தார். அவர் நெஞ்சு வெடித்து விடும்போல் இருந்தது.

தனது அறைக்குப் போய் தனது வேட்டியையும், சால்வையையும் ஒரு பையில்வைத்துக்கொண்டு வெளியே வந்தார். நேரே அம்மனுக்கு முன்போய் மௌனமாகநின்றார். பின்பு நேரே குளக்கரை அம்மன் கோவிலுக்குப் போனார்.

கோவில் பூந்தோட்டத்தில் பூப் பறித்துக் கொண்டிருந்த குருக்கள், நடேசரைப் பார்த்ததும் 'என்ன இந்தப் பக்சம்' என்று கேட்டார். 'இனி இதுதான் வீடு' என்று சொன்ன வண்ணம் மடத்தை நோக்கிப் போனார். குருக்களுக்குப் புரிந்துவிட்டது. நடேசருக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தார்.

கிரிஜா விடிய எழுந்ததும் கிணற்றடியைப் பார்த்தாள். நடேசரைக் காணவில்லை. அறையைப் பார்த்தாள். அங்கும் இல்லை. சந்திரனிடம் போய்ச் சொன்னாள்.

'கோபம் ஆற திரும்பி வந்திடுவார்' என்று சொல்லிவிட்டுத் தன் வேலைகளைச் செய்தான் சந்திரன்.

அன்று மாலை அவன் ஆபீசால் வந்தபோது 'உங்கப்பா இன்னும் வரவில்லை' என்றாள் கிரிஜா. 'கோயில் மடத்தடியில் இருக்கிறாராம். வந்திடுவார்' என்றான் சர்வசாதாரணமாக.

டாயாக்கும் எண்டு நினைச்சன். ஒரு கிழவிக்கா பயப்படுகிறாய்' என்று சொன்னவனின் வாயைப் பொத்தினாள்.

சந்திரனுக்கு ஒன்றும் புரியவில்லை. 'வெள்ளைச்சீலை உடுத்து வந்தது அம்மனுங்க. உங்கப்பா காலைல மூன்று குடம் நீரால அபிஷேகம் செய்து, பூசை செய்வாரல்லவா. இப்ப மூண்டு நாள் இல்லை. அதுதாங்க கனவில வந்திருக்கிறா. பெரிய பிழை செய்திட்டோமுங்க' என்றாள் குரல் நடுங்க.

சந்திரனுக்கு இப்போது எல்லாம்புரிந்தது. தான் சின்னக்குழந்தையாக இருக்கும் போதே

'சத்தம் போடாதைங்கோ, இரவு நேரம், அடுத்த வீட்டுக்குக் கேக்கும். நான் செய்தது பிழைதான். மன்னிச்சுக் கொள்ளுங்கோ. மாமாவை நாளைக்குக் கூட்டிக்கொண்டு வாருங்கோ' என்று அழுதபடி கெஞ்சினாள்.

'மாமா' என்ற சொல் கேட்டுக் கோபத்தால் அவன் முகம் சிவந்தது. 'இவ்வளவு காலமும் உங்கப்பா, உங்கப்பா என்று வேற்று மனிதரைக் குறிப்பிடுவது போலச் சொன்னாய். இப்பதான் மாமா என்ற உறவு தெரிஞ்சுதோ. அவர் உறவையே அறுத்தெறிந்து போட்டாரடி' என்று பொரிந்து தள்ளினான்.

அன்று இரவு ஓருமணியளவில் திடீரென விழித்துக்கொண்ட சந்திரன் பக்கத்துக் கட்டிலில் படுத்திருந்த கிரிஜா நித்திரை கொள்ளாது விழித்தவண்ணம், முகட்டைப் பார்த்தபடி இருப்பதைக் கண்டான்.

சந்திரன் தன்னைப் பார்ப்பதைக் கண்டதும் 'கனாக் கண்டேனப்பா அதுக்குப்பிறகு நித்திரையே வரவில்லை' என்றாள்.

'பித்தம் தலைக்கேறிட்டுது. நல்லா முழுகு கனவு வராது. இந்த ஷாம்பு வேண்டாம். சீயாக்காய் வைத்து முழுகு' என்று சொன்னவன் திரும்பிப்படுத்தான்.

அடுத்தநாள் இரவும் அதே நேரம் கிரிஜா கனவு கண்டு, உடலும் உள்ளமும் பதற கணவனை எழுப்பினாள். 'என்ன இண்டைக்கும் கனவா' என்று கேட்டான்.

கிரிஜா ஒன்றும் பேசவில்லை. அவள் முகத்தில் நிலவிய பீதி சந்திரனைக் கலங்க வைத்தது.

'என்னப்பா குழந்தை போலக் கனாக்கண்டு பயப்படுகிறீர்' என்று கேட்டான்

'வெள்ளைச் சீலை உடுத்த கிழவி குளிக்க மூன்றுகுடம் தண்ணி கேட்டுதுங்க' என்றாள்.

சந்திரன் சிரித்தான். 'இதுக்கா பயந்து சாகிறாய். நான் ஏதோ பேய் பிசாசைக் கண்

தகப்பன் அம்மனுக்குப் பூசை செய்து வந்தது நினைவில் வந்தது. இருபது வருடங்களுக்கு மேலாகத் தகப்பன் செய்த பூசையைத் தான் வலுக்கட்டாயமாக நிறுத்தியதை எண்ணிப் பார்த்தான்.

முதல் முறையாக மனைவிமேல் எரிச்சலும், ஆத்திரமும் வந்தது.

'எல்லாம் உன்னாலை வந்தது. யாரோ ஒருத்தி வந்ததுக்காக அப்பாவின்ரை கோலத்தைப் பார்த்துத் துள்ளிக் குதித்தாய். மூன்று வேளை சோறு போடுவதாகச் சொன்னாயே. பத்துவயது முதல் அவர்தாண்டி எனக்குச் சோறு சமைத்து, தீத்தி விட்டது. தாயும் அவர்தான், தகப்பனும் அவர்தான். உன்ரை சொல்லைக்கேட்டு அந்த தெய்வத்தின் மனதை நோகப் பண்ணிப் போட்டேனே' என்று சத்தம் போட்டான்.

'சத்தம் போடாதையுங்கோ. இரவுநேரம். அடுத்தவீட்டுக்குக் கேக்கும். நான் செய்தது பிழைதான். மன்னிச்சுக் கொள்ளுங்கோ. மாமாவை நாளைக்குக் கூட்டிக்கொண்டு வாருங்கோ' என்று அழுதபடி கெஞ்சினாள்.

'மாமா' என்ற சொல் கேட்டுக் கோபத்தால் அவன் முகம் சிவந்தது, குரல் நடுங்கி

(24ஆம் பக்கம் பார்க்க)

# கர்ப்பிணிக்குத் துணைநின்ற வைரவர்

யூ. எஸ். எஸ், அருளானந்தன்

வைரவ மூர்த்தியானவர் உடுவில் மல்வம் குறிச்சியில் கோயில் கொண்டமை மிகவும் அற்புதமான சம்பவமாக இன்றும் முதியவர்களாலும் மற்றவர்களாலும் பேசப்பட்டு வருகிறது.

இக் கோயில் அமைந்துள்ள இடத்திற்குத் தெற்குப் பக்கத்தில் அப்போது மயானம் இருந்ததாம். இக்கோயில் மூலஸ்தானம் அமைந்துள்ள இடத்தில் பெண் ஆலமரம் எனப்படும் கருவாலமரம் செழித்து வளர்ந்திருந்ததாம். கோயிலுக்கு மேற்கே குடியிருப்பு. கிழக்கே தோட்டங்கள். குடியிருப்பில் இருந்து தோட்டங்களுக்குச் செல்லும் கமக்காரர் இந்த மயானத்திற்கும் ஆலமரத்திற்கும் பக்கத்தால் செல்லும் ஒழுங்கையின் ஊடாகவே செல்வர்.

அந்தக் காலத்தில் இப்பகுதியில் 'பொடியர்' என்று அழைக்கப்பட்ட ஒருவர் வசித்து வந்தார். அவர் வழமை போல் மாலைநேரம் தோட்டத்திற்குச் சென்றுகொண்டிருந்தார். ஆலமரத்தைக் கடந்து செல்லும்போது 'பொடியர்', 'பொடியர்' என அழைக்கும் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தார். யாருமில்லை. அவர் தன்வழியே சென்றார். மறுநாளும் இதேபோல் அவரை அழைத்துக் கேட்டது. திரும்பிப் பார்த்தார் 'யாருமில்லை. போய்விட்டார். மறுநாளும் அதேபோல் குரல் கேட்டதும் பொடியருக்கு அச்சம் ஏற்பட்டது என்னவோ! ஏதோ! என்று பயந்து ஓடத் தொடங்கினார்.

அசரீரி குரல் கொடுத்தது. 'பொடியர்' அது நானடா. வைரவர். நீ ஓடாதே! பயப்படாதே. நான் இந்த ஆலமரத்தில் குடியிருக்கப் போகிறேன். நீ விளக்கு வைக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டது. பொடியருக்கு ஆச்சரியமாகவும் ஆனந்தமாகவும் இருந்தது. அத்தோடு தர்மசங்கடமாகவும் இருந்தது.

'கடவுளே உன்னை ஆதரிக்கும் சக்தி எனக்கில்லையேஎன்றார். அதற்கு வைரவசுவாமி பொடியர்! நீ என்னை ஆதரிக்கலாம் உன்னால் அதுமுடியும்' எனக்கூறி மறைந்தார்.

தெய்வத்தைத் தேடி பக்தன் செல்வதா? அன்றி பக்தனைத் தேடி தெய்வம் போவதா? இதுதான் திருவிளையாடலா? மலைகளிலும், காடுகளிலும் உன்னைத் தேடி ஓடும் யோகியரும், ஞானிகளும் எத்தனை பேர். நீயாக ஓடி வந்து சாதாரண மனிதர்களிடம் தஞ்சம் அடைவது தான் என்னே? கீர்த்தியுள்ள மூர்த்தி தானாகவந்து குடியிருந்ததால் இந்த ஸ்தலம் மூர்த்தி விசேடம் பெற்றது.

அன்று முதல் இப்பகுதியில் காவல் தெய்வமாக இருந்து வருகிறார் வைரவமூர்த்தி.

அநாதையான ஒரு கர்ப்பிணிக்கு பிரசவ வேதனை தோன்றியது. யாருமில்லை வைரவா என வேண்டினார். வைரவர் ஒரு கிழவனாக அவர் வீட்டிற்குச் சென்று முற்றத்தில்அமர்ந்தபடியே சுகப் பிரசவமாக்கி ஒரு பக்தையின் கனவில் தோன்றி உதவிக்குச் செல்லுமாறு பணித்துவிட்டு மறைந்தார்.

இந்த அற்புதங்களை நினைத்துப் பார்க்க மெய் சிலிர்க்கின்றது.



## புராண நோக்கில்

# நவராத்திரி

முன்னொருகாலம் நான்முகனும், திருமாலும் ஒருவரையொருவர் எதிர்த்துப்போரிட்டார்கள். திருமாலுடன் போர்புரிந்து வெற்றி காண முடியாத நான்முகன் மகிடன் என்னும் அசுரனைப் படைத்து திருமால் மீது போரிட வைத்தான். இது ஒரு வரலாற்றுக்கதை.

முன்னொருகால் அகத்தியர் முதலான முனிவர் பதின்மர் வரமுனி என்னும் முனிவன் பாற்செல்ல, அம்முனிவன் தன் தவவலிமையால் அவர்களை அவமதித்தான். இதனால் சினங்கொண்ட அவர்கள் வரமுனியை நோக்கி ''எம்மை இகழ்ந்த தன்மையால் இனி நீ கருங்கடர்வாய்ப் பிறக்கக் கடவாய்'' என சபித்தனர். அதனால் அவ்வரமுனியே ஆற்றல் மிக்க மகிடாசுரனாக பிறந்தான். இது மற்றொரு வரலாற்றுக் கதை.

மகிஷம் என்பது எருமை என பொருள்படும். எருமைத் தலையை உடைய அம்மகிடாசுரன் தேவர்களைப் பெரிதும் வருத்தினான் என அருணாசல புராணம் விபரிக்கின்றது. பலம் பொருந்திய மகிடாசுரன் திருமால் துயில் கொள்ளும் பாம்பினை அதன் தலையையும், வாலையும் சேர்த்துத்தூக்கிக் கவண்போல் கையில் பிடிப்பானும். சந்திரனைப் பிடித்து கையாற் பிழிந்து அதில் வரும் அமுதை உண்டு மகிழ்வானும். இந்திரனுடைய வெள்ளை யானை மீது ஏறி உலா வருவானும். சூரியனுடைய தேரில் ஏறி பச்சைக்குதிரைகளில் பவனி வருவானும். எருமை முகத்தையுடைய அவனைக் கண்டு இயமன் கூட தன் எருமைக்கடா வாகனத்தில் ஏறப்பயந்து காலால் நடந்து திரிந்தானும்.

இவ்வாறு மகிடாபுரம் என்ற நகரில் இருந்து மகிடாசுரன் கொடுங்கோல் நடத்தியதாக அருணாசலபுராணம் கூறுகின்றது.

இவனுடைய கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர்களும் முனிவர்களும் தேவியை வேண்ட, வேண்டுவார் வேண்டி அருளும் தேவி துர்க்கை வடிவம் தாங்கி, மகிடாசுரனின் மகிடத் தலையை வெட்டித்தன் திருவடியில்போட்டு மிதித்தருள, அரக்கனும் தனது ஆணவ மன வலி நீங்கி மெய்யுணர்வெய்தப் பெற்றான்.

''ஆதியாய், அந்தத்தின் அந்தமாய் நின்ற முதல்வர்க்குப் பாதியாய், ஒன்றாய்ப் பலவாகிப் பல்லுயிராகிப், பேதியா நின்ற பெருமாட்டியின் அருளைப் பெற்றனன் மகிடாசுரன்.

இவ்வாறு தேவியை துர்க்கை வடிவில் வழிபடும் வழக்கம் தோன்றியது. துர்க்கையை

**வி. பரிபூரணானந்தசர்மா**

வழிபடும்படி கண்ணன் அர்ச்சுனனுக்கு உபதேசித்ததாக மார்க்கண்டேய புராணம், ஸ்கந்த புராணம் போன்ற நூல்கள் கூறுகின்றன.

கதைகள் எப்படி இருப்பினும், ஆணவத் தடிப்பாகிய எருமைக்குணம் அதிகரிக்கும்வேளையில் இறைவியின் அருளால் ஆன்மாக்களின் ஆணவ இருளான அரக்கனைத் தன் ஞானவாள் கொண்டு வெட்டி மெய்ஞான பேரொளி நல்கி நலமளிப்பாள் தேவி என்பதே கருப்பொருளாகும்.

சுகேதனன் என்ற அரசன் அரசாட்சி இழந்து மனைவியுடன் காடு சென்றான். ஆங்கிரசன் எனும் முனிவன் நவராத்திரி விரதம் பற்றி அரசனுக்கு எடுத்துரைத்து தேவியை மனம், மொழி, மெய்களால் வழிபடுமாறு உபதேசித்தான். அரசனும் அவ்வாறே ஒழுகி இழந்த தன் இராச்சியத்தையும் தேவியின் அருளையும் பெற்றான். இது போல நவராத்திரி விரதம் அனுட்டித்து தேவியின் கடைக்கண் பெற்றோர் வரலாறுகள் பலவுள.

நவராத்திரி காலத்தில் முறையே மும்மூன்று தினங்கள் துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய தேவியர் பூசிக்கப்படுவர். துர்க்கை வழிபாட்டால் வெற்றியும், இலக்குமி வழிபாட்டால் செல்வமும், சரஸ்வதி வழிபாட்டால் கல்வியும் எம்மை வந்தடையும்.

பிரபஞ்சமெங்கும் நிறைந்திருக்கும் பரம் பொருள் சக்தி வடிவாக யாவற்றிலும் வியாபித்திருப்பதை நாம் காணக்கூடியதாயிருக்கிறது.

ஒரு மரத்தின் வேரிலிருந்து புறப்படும் சக்தியானது இலையாகி, கிளையாகி, பூவாகி' காயாகி, கனியாகி, அம்மரத்தின் வளர்ச்சியை வெளிப்படுத்துகிறது. மனிதர்கள், ஜீவராசிகள், புல்பூண்டுகள் அனைத்தினதும் தோற்றமும் வளர்ச்சியும் சக்தியின் வெளிப்பாடுகளே.

எங்கும் நிறைந்திருக்கும் பரப்பிரம்மம் எப்படியெப்படி எல்லாமோ பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருந்து எல்லாவித சக்திகளாகவும் இயங்கி வருகின்றது.

சாதாரண மனிதர்களின் சிற்றறிவுக்கு இந்த உண்மை புரியாது என்ற காரணத்தினால் தான் இந்துசமய ரிஷிகளும், ஞானிகளும், முனிவர்களும் அந்த சக்திக்குப் பல வடிவங்களையும், நாமங்களையும் குணங்களையும் கூறி அதை வழிபடும் நெறிமுறைகளை இந்துக்களுக்கு வகுத்துக் கொடுத்துள்ளனர்.

# சக்தி வழிபாடு

பரப்பிரம்மத்திலிருந்து வெளிப்பட்ட புருஷனும் பிரகிருதியும் பிரபஞ்சத்தில் ஜீவராசிகளையும் சடப்பொருள்களையுந் தோற்றுவிக்கின்றன என்று வேதங்கள் கூறுகின்றன.

புருஷன் என்பது சடப்பொருளையும் (Matter) பிரகிருதி என்பது சக்தி (Energy) யையும் குறிக்கின்றன.

சக்தியென்றும், மாயை என்றும், இயற்கை என்றும் விபரிக்கப்படும் பிரகிருதியானது பரம்பொருளின் சக்தியை வெளிப்படுத்தும் அம்சமாக இயங்குகிறது.

'கர்ப்பாசயங்கள் எல்லாவற்றிலும் பிறக்கின்ற வடிவங்களுக்குப் பிரகிருதி தாயாகின்றாள். கர்ப்பதானம் செய்யும் தந்தை நான்' (அத். 14 - சா. 4) என்று பகவான் கீதையில் கூறுகிறார்

பரமாத்மா மூலமாயிருந்துகொண்டு பிரகிருதிமூலம் எல்லாவற்றையும் பரிணமிக்கச் செய்வதையே இச்சுலோகம் விளக்குகின்றது.

பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருக்கும் பரப்பிரம்மத்தின் சக்திக்கு விஞ்ஞானிகள் தமது ஆராய்ச்சிக்கும், பாவனைக்கும் ஏற்ப பல பரிமாணங்களைக் கொடுத்து விவரிக்கின்றனர்.

அணுசக்தி, மின்சக்தி, காந்தசக்தி, உந்து சக்தி, இயங்குசக்தி, ஈர்ப்புசக்தி என்று எத்தனையோ வகைகள்.

அணுசக்தியின் விஸ்வரூபம் வெளிப்படுத்தப்பட்ட காலகட்டத்தில் வசிப்பவர்கள் நாம். அடுத்த நூற்றாண்டில் அணுசக்தியையே தெய்வாம்சமாகப் போற்றிப் பேணும்காலம் வரினும் அது வியப்புக்குரியதுமல்ல, இந்துசமய கோட்பாடுகளுக்கு அது முரண்பாடானதுமல்ல.

'அன்னையாய் கண்டவர்க்கு அன்னையாய், தந்தையாய் கண்டவர்க்குத் தந்தையாய், ஆசானாய் கண்டவர்க்கு ஆசானாய், அருவமாய் காண்பவருக்கு அருவமாய், உருவமாய் காண்பவருக்கு உருவமாய், சக்தி

— அ. குமரகுரு —

யாய், சிவமாய், நாராயணனாய், சண்முகனாக, கணபதியாய் நின்று அருள்புரியும் பரம்பொருள் ஒன்றே' என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள்.

பெற்ற தாயிடம் நாம்காணும் அன்பை வேறெவரிடமும் காணமுடியாது. தாயிடம் அன்பு செலுத்துவது இயல்பாகவும், இலகுவாகவும் ஏற்படுகிறது. தாயிடம் குழந்தை தான் விரும்புவதையெல்லாம் கேட்டுப் பெற்றுக்கொள்கிறது.

இந்த மனோபாவத்தில்தான் பரம்பொருளை அன்னையாய் வரித்து வடிவம் கொடுத்து கல்விக்கு ஒருதேவி, செல்வத்துக்கு ஒருதேவி, வீரத்துக்கு ஒரு தேவியென வழிபடுகிறோம்.

# மகன் தந்தைக்கு ஆற்றிய...

அழகு அருணாசலம்

சந்தனு என்ற அரசன் (தருமர் முதலான ஐவருக்கும், துரியோதனன் முதலான நூற்றொருவருக்கும் பாட்டன்) வேட்டையாடச் சென்று காட்டில் தங்கியிருந்தான். காட்டின் நடுவில் அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது யமுனை நதி. யமுனை நதிக்கரையில் இருந்து காற்றுடன் கலந்து வந்த நறுமணமொன்று, சந்தனுவின் சிந்தையைக் கவர்ந்திருந்தது. தான் முன்பு அனுபவித்திராத நறுமணம் வந்த திக்கை நோக்கி நடந்தான் சந்தனு. எதிரில் பெண்களும் மயங்கும் பேரழகு படைத்த ஒரு மங்கை ஒயிலாக நடந்து வந்துகொண்டிருந்தாள். அவளின் அழகில் அலையுண்ட சந்தனு அருகிற் சென்று உரையாடினான்.

அவள் யமுனை நதியில் ஓடம் விட்டுப் பிழைக்கும் தாசராசன் என்னும் செம்படவனின் மகள் சத்தியவதி என அறிந்தான். பின்பு தனது தேர்ப்பாகனையும் அழைத்துக் கொண்டு, செம்படவனிடம் சென்று சத்தியவதியை மணந்துகொள்ள விரும்புவதாகச் சொன்னான்.

செம்படவன் சந்தனுவை வணங்கி 'மன்னவரே உங்களுக்கு, ஏற்கனவே கங்காதேவியின் வயிற்றிற் பிறந்த காங்கேயருக்கு இளவரசுப் பட்டங்கட்டியுள்ளீர்கள். எனினும் எனது மகளின் வயிற்றிற் பிறக்கும் மகனுக்கு இளவரசுப் பட்டாபிஷேகம் செய்து, பின்பு இராச்சியத்தையும் கொடுப்பீராயின் எனது மகளை உமக்குத் திருமணம் செய்துதர இசைவேன்' என்றான்.

காங்கேயருக்கு உரிய அரச பதவியை இளையாளின் மகனுக்குக் கொடுக்கச் சந்தனுவின் மனம் இசையவில்லை. கவலையுடன், அரண்மனைக்குத் திரும்பிய சந்தனுவைக் காதல்நோய் ஒரு பக்கமாய், கடமை உணர்வு ஒரு பக்கமாக நின்று வருத்தின. சத்தியவதியின் மீது கொண்ட காதலால் உள்ளம் உடைந்து, உடல் இளைத்துப்போனார்.

பிதாவின் உடலிலும், உள்ளத்திலும் உண்டான மாற்றங்களின் காரணத்தை அறிய முடியாத காங்கேயர் மிகவும் கலக்கமுற்றார். பின்பு நடந்தவையெல்லாம் தேர்ப்பாகன் மூலம் அறிந்து. அரசமாதர், அந்தணர், அமைச்சர் முதலானோர் கூட வர ஆடை அணிகள் எடுத்துக்கொண்டு தாசராசனிடம் சென்று வணங்கி 'நீர் இன்றுமுதல் எனது பாட்டனார் - தங்கள் மகள் எனது அன்னை - இந்த இராச்சியம் இனி எனது அன்னையின் வயிற்றில் பிறக்கும் தம்பியர்க்கே உரியது - உங்கள் மகளை எனது பிதாவுக்குத் திருமணம் செய்து வைக்க இசையுங்கள்' என்று வேண்டிநின்றார்.

தாசராசன் 'இளவரசே தாங்களும் விவாகம் செய்து இனிமேற் பிறக்கப்போகும் உங்கள் மகன் இராச்சிய உரிமை கொண்டாடக் கூடுமே' என்று ஐயுற்று நின்றான். அவனுடைய தயக்கத்தைப் புரிந்துகொண்ட காங்கேயர் 'என் தந்தையின் மகிழ்ச்சிக்காக நான் இந்தப் பிறவியில் பிரமச்சரியம் காத்து வாழ்வேன். இது சத்தியம்' என்று பிரதிக்கனை செய்தார். பின்பு சத்தியவதியை அத்தினாபுரத்துக்கு அழைத்துக் கொண்டுபோய் சந்தனுவுக்குத் திருமணம் செய்து வைத்தனர்.

அரிய பயங்கரமான விரதத்தை மேற்கொண்ட காங்கேயர் 'பீஷ்மன்' என்னும் காரணப் பெயரையும் பெற்று, வாழ்நாள் முழுவதும் மாதரை மனதாலும் தீண்டாத தவநெறியில் நின்றொழுகினார்.

இது மகாபாரதத்தில் வரும் ஒரு சம்பவம். இனி,

விடிந்தால் இராமனுக்குப் பட்டாபிஷேகம். தசரத மன்னன் உயிரினும் மேலாக நேசித்த இராமனின் பட்டாபிஷேக ஒழுங்குகளை மேற்கொண்டு விட்டு - மனைவி கைகேயியின் அந்தப்புரத்துக்கு வருகிறார். இராச்சிய விஷயங்கள் எதிலும் தலையிடாமல், அன்புக்குரிய மனைவியாக வாழ்ந்தவள் கைகேயி. வழக்கமாக ஆவலுடன் வரவேற்கக் காத்திருக்கும் கைகேயி அன்று அங்கு இல்லை.

( 23ஆம் பக்கம் பார்க்க)

# கந்தபுராணம் தோன்றிய கதை

ராணி சின்னத்தம்பி

முன்னொரு காலத்திலே மூவுலகத்துள்ளோரும் செய்த பாவச் செயல்களினாலே, வேதங்கள் அனைத்தும் பிரித்துணரமுடியாத படி குழம்பிப் போயின. இதனால் முனிவரும் தேவரும் இன்ன செய்வதென்றறியாது திகைத்தனர். உலகிலே நீதி நெறிகள் குன்றி, எங்கும் பாவச் செய்கைகள் பல்கிப் பெருகின. இந்நிலையில் வேதங்களின் காரணகர்த்தாவே சிவனென்றறியாத தேவரும் முனிவரும் மாந்தரும் ஞானஉணர்வின்றித் தம் மனம் போன படி நூல் பல இயற்றினர்.

இவ்வாறாக, தருமம் இது, பாவம் இது என்றறியாது நூல்கள் செய்யப்படுவது கண்டு விஷ்ணுவும், பிரமனும் மனம் மிக வருந்தினர். இதற்கு மாற்று வழி ஏதும் தம்மிடத்தில்லை என உணர்ந்த அவர்கள், முழுமுதற் கடவுளாகிய சிவனே இதனைத் தீர்த்துவைக்க வல்லார் என மனதிற்கொண்டு சிவபிரானிடம் சென்றனர்.

கைலயங்கிரிக்கு அதிபதியான முக்கண்ணனிடத்துச் சென்று இருவரும் தம் மனக்குறை தெரிவித்து, மூவுலகத்தோர்க்கும் நல்லருள் புரிய வேண்டுமென்று இரந்து நின்றனர். இதற்கு ஈசனவர் மனமிரங்கி, விஷ்ணுவை நோக்கி, 'காத்தற்கடவுளாகிய நீதான் மூவுலகையும் உய்யவைக்க வேண்டும். ஆகவே பூலோகத்திலே வியாதன் என்ற பெயருடன் பிறந்து, ஞான உணர்வெய்திய ஒரு முனிவனாக வாழ்வாயாக. அப்படி வாழுங்காலத்தில் உனக்கு வேதங்கள் அனைத்தும் பிறர் போதிக்காமலே அறியும் ஆற்றல் கிடைக்கும். அப்படி அறிந்த வேதத்தை மற்றவர்க்கு அவரவர் இயல்புக்கேற்பப் போதித்து அவர்கள் அறியாமை இருளை நீக்குவாயாக. அத்துடன் நான் முன்பு நந்திதேவர்க்குப் போதித்து, அவர் சனற்குமார முனிவர்க்குக் கற்பித்த இன்னொரு வேதமாகிய தொல்புராணமும் உண்டு. அத்தொல்புராணம் பதினெட்டு வகைப்படும். அதனையும் சனற்குமார முனிவரிடமிருந்து கேட்டறிந்து கொள்வாயாக' என்று அருளினார்.

விஷ்ணு பகவானும் முழுமுதற்கடவுளான சிவனின் பணிப்புரைக்கு ஏற்ப பூவுலகிலே பராசரன் என்ற முனிவர்க்கும் மச்சயந்தி என்ற படகோட்டிப் பெண்ணுக்கும் மகவாய் அவதரித்தார். அவர் வதரிகாவனம் என்னும் பெயருடன் வாழ்ந்து வந்தார். அக்காலத்திலே சிவனருளாலே யாரும் போதிக்காமலே வேதங்கள் அனைத்தையும் உணர்ந்து அவற்றை இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காய்ப் பிரித்தனர். இதனால் அவருக்கு வியாதன் என்ற பெயர் வரப்பெற்றது.

வியாதமுனிவர் என்று அழைக்கப்பட்ட வியாசமுனிவர் நான் மறைகளையும் பயிலர், வைசம்பாயனர், சயிமினி, சுமந்து ஆகிய நான்கு முனிவர்க்கும் போதித்தார்.

இப்படியான வியாசமுனிவர் தான் தன் மகன் போலக் கருதித் தனக்குப் பதினென் புராணங்களையும் ஓதுவித்ததாய்ச் சூத முனிவர் என்பார் நைமிசாரணியத்து முனிவர்களுக்குச் சொல்லியருளினார். அவ்வியாச நன்முனி சொல்லியபடியே இப்புராணங்களை நான் உலகோர்க்கு அறிவிப்பேன் என்றார் சூதமுனிவர்.

இப்புராணங்களிற் சிவபிரானின் புராணம் பத்து, விஷ்ணுவின் புராணம் நான்கு, பிரமனின் புராணம் இரண்டாகும். கந்தபுராணம் சிவபுராணங்களுள் ஒன்றாகும். இக் கந்தபுராணம் முருகப்பெருமான் வரலாறு கூறுகிறது.

உமையம்மை இமயமலை அரசன் மகளாகத் தோன்றி, சிவபிரானை மணந்தும், சூரபன்மனைக் கொல்லச் சிவனார் தன் நெற்றிக் கண்ணிலிருந்து முருகனைத் தோற்றுவித்ததும், அத்திருக்குமரன் செய்த திருவிளையாடல்களுமே கந்தபுராணத்திற் கதைகளாகக் கூறப்பட்டுள்ளன.

சூதமுனிவர் கூறிய கந்தபுராணத்தைத் தொண்டை மண்டலத்தின் காஞ்சிபுரத்தில் அவதரித்த கச்சியப்ப சிவாச்சாரியார் தமிழில் அருளிச் செய்துள்ளார். ★

# பொலிஸ் "சார்ஜன்" சாமியான அதிசயம்

சிலசமயங்களில் சுவாமிகள் தனக்குத் தானே பேசிக்கொண்டு செல்வதும் சிலசமயம் ஒருவரோடும் பேசாது மௌனமாகத் திரிவதும் உண்டு. பெரியகடைத் தெருவழியே பைத்தியம் பிடித்தவர். போல் அலைவதும் உண்டு.

அவரை நன்கு புரியாதவர்கள் அவரைப் பைத்தியம் எனக் கருதினர்.

பதவியைத் துறந்து சொத்து சுகங்களை வெறுத்து, பந்த பாசங்களை அறுத்தெறிந்து, பற்றற்றான் பற்றினை வேண்டி நின்று, அவனுடன் தொடர்பு கொண்ட ஒருவன் மற்றவர்கள் பார்வைக்குப் பைத்தியம் போல் தான் தெரிவான்.

பெரியகடையில் அலைந்து திரிந்த கடையிற்சுவாமிகளை பொலிசார் பைத்தியம் என்றே கருதினர். அவரைப்பிடித்து, நீதிமன்றத்தில் ஆஜார் செய்து, நீதவானிடம் உத்தரவுபெற்று கொழும்புக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்தனர்.

பொலிஸ் நிலையத்தில் உள்ள லொக்கப்பில் பூட்டி மறுநாள் கொழும்பு கொண்டு செல்ல ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அடுத்தநாள் லொக்கப்பினுள் பார்த்த போது சுவாமிகள் அங்கு இருக்கவில்லை. லொக்கப் பூட்டியபடியே இருந்தது

சுவாமிகள் பழையபடி வீதியில் உலாவித் திரிந்தார்கள்.

பொலிசார் அவருடைய பெருமையை உணர்ந்து அவர்மீது பக்தியும் அன்பும் கொண்டார்கள்.

அவர்களில் ஒருவர் பொலிஸ் சார்ஜன் அவர் கந்தர்மடத்தில் கந்தப்புராண வீதியில் வசித்து வந்தார். கடையிற்சுவாமிகளின் தெய்வீகசக்தி இந்தப் பொலிஸ் சார்ஜனின் வாழ்வில் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தியது. சின்னத்தம்பி என்னும் அந்த சார்ஜன் ஆன்மீக வாழ்வில் ஈடுபட்டுப் பிற்காலத்தில் சார்ஜன் சுவாமிகள்என அழைக்கப்பட்டார்.

கடையிற்சுவாமிகள் பெரியகடை மூலை முடுக்கெல்லாம் அலைந்து திரிவது வழக்கம். சிலசமயம் கடைகளின் முன்னுக்குப் போய் நிற்பார். சிலசந்தர்ப்பங்களில் கடைக்குள்ளே சென்று காசு வைக்கும் மேசை லாச்சியினுள் கைபோடுவார். கடைமுதலாளிகள் எவ்வித எதிர்ப்பும் தெரிவிப்பதில்லை. அதற்குமாறாக அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். சுவாமிகளின் கை காசுப்பெட்டியில் பட்டால் அதிஸ்டம் என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால் கடையிற்சுவாமி தங்கள் கடைக்கும் வர

**சு. பசுபதிப்பிள்ளை**

வேண்டும். எனப் பல கடை முதலாளிகள் விரும்பினர். ஆனால் எல்லாக் கடைகளுக்கும் போகமாட்டார். சில சந்தர்ப்பங்களில் கடையினுள் போய் சில்லறைக்காசுகள் எடுத்துக் கொண்டு வீதிவழியே ஓடுவார். பள்ளிப் பிள்ளைகள் பின்னால் ஓடுவார்கள். அவர்களுக்குக் காசுகளை வீசிவிட்டு வீதியிலேயே நடனம் ஆடுவார். அது ஆனந்த நடனம்.

கடையிற்சுவாமிகள் காலத்தில் ஈழத்தில் வாழ்ந்த இன்னொரு சித்தர் நல்லூர் செல்லப்பாசுவாமிகள். செல்லப்பாசுவாமிகள் கடையிற்சுவாமிகளை தனது குருநாதராக ஏற்றுக் கொண்டவர்.

கடையிற்சுவாமிகள் சாதி, பேதம், உயர்வு தாழ்வு, செல்வர், வறியவர் என்ற வித்தியாசம் பாராது எல்லோருடைய வீடுகளுக்கும் போவார். எங்கும் சாப்பிடுவார்.

சிலசமயம் ஏழைகளின் இல்லங்களுக்கு சென்றபோது, அவர்கள் தாங்கள் உண்ணும் மாமிசத்தையும், மதுவையும் பரிமாறினார்கள். விருப்பு, வெறுப்பு, பற்று, பாசம் எதுவுமே அற்ற சுவாமிகள் அவற்றையும் ஏற்றனர்.

இதைக் கேள்வியுற்ற செல்லப்பாசுவாமிகளுக்கு, நம்பமுடியாது போய் விட்டது; அவரால் சகிக்கவும் முடியவில்லை.

## ஞான பரம்பரையை உருவாக்கிய

# கடையிற் சுவாமிகள்

மூன்றுவது சித்தபுருஷரான கடையிற் சுவாமிகள் யாழ்ப்பாணச் சமய வரலாற்றில் ஒரு தனியிடம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில்ஒரு ஞானபரம்பரையை ஏற்படுத்தியதால், அவரை ஆதிகுருவென்று கூறலாம்.

யாழ்ப்பாணத்தில் உசன், கந்தர்மடம், ஏழாலைமுதலிய இடங்களிற் காணப்படும் மடங்களெல்லாம் சுவாமிகளின் சீடபரம்பரையினராலேயே ஸ்தாபிக்கப்பட்டன.

யோகர் சுவாமிகளும் கடையிற் சுவாமி பரம்பரையினரே. யோக சுவாமிகளின் குருவான செல்லப்பாச் சுவாமி கடையிற் சுவாமிகளின் சீடராவர்.

யோகர் சுவாமிகளும் தாம் பன்னிரண்டு வயதுச் சிறுவனுயிருந்த பொழுது கடையிற்

— எஸ். கே. யோகநாதன் —

சுவாமிகளைக் கண்டதாகக் கூறியுள்ளார்.

யோகர்சுவாமிகள் கடையிற் சுவாமியைப் பற்றிக் கூறும்பொழுது பரவசநிலை எய்துவார். அவர் கடையிற் சுவாமியைப் பின்வருமாறு கூறுவார்.

''கடையிற் சுவாமி சிவபோகத்தைப் புசித்தவர்.
அவரோடு ஒப்பிடும் போது நாமெல்லாம் எங்கே?
கிருஷ்ண பரமாத்மாபோல் அவர் பல லீலைகள் புரிந்துள்ளார்.
அவர் நன்மை,தீமைக்கு அப்பாற் பட்டவர் அவர் என்ன செய்தாலும் அவரைக் குறை சொன்னவர்கள் கிடையாது.''


தம்மோடு நெருங்கிப் பழகும் அன்பர்களுக்குக் கடையிற் சுவாமியின் அதீத நிலையை விளக்குவதற்கு மேற்கண்டவாறு நடிப்பார்.

பெரிய கடையில் மிகப்பெரிய புடவைக் கடைக்காரர் ஒருவர் ஒரு தீபாவளித் தினத்திலே சுவாமிகளை இடைமறித்து விலையுயர்ந்த பட்டாடை ஒன்றை அவர் தோளிற் போர்த்தி மேனியிற் சந்தனம் முதலிய வாசனைகள் பூசி, மலர்மாலை அணிவித்து மகிழ்ந்து வணங்கினர்.

சுவாமிகளும் அவர் வழிபாடுகளை ஏற்றுக் கொண்டவர் போல் நடித்தார்கள். அவ்வேளை அவ்வழியே தீண்டாச் சாதியான் ஒருவன் சென்ருன்.

சுவாமிகள் அவனை அவசரமாகத் தம்மருகே வரும்படி கையை அசைத்தார். அதனையுணர்ந்த அம் மனிதன் அஞ்சி ஒதுங்கித் தயங்கி நின்ருன். உடனே சுவாமிகள் தன் தோளிற்கிடந்த பட்டாடையைக் கழற்றி அவன் தோளிற் போர்த்து ''முற்பிறப்பிலே நேபாள ராசா நீ போ'' என்று கூறிவிட்டுத் தம்வழியே சென்ருர்கள்.

சுவாமிகள் பெரியகடைப் பகுதியை அல்லாமல் மண்டைதீவுக்கும் போய்வரும் வழக்கம் உள்ளவர்கள். அதனுல் மீனவரிடையேயும் அவரை வணங்கும் அடியார்கள் இருந்தார்கள். ஒரு சமயம் சுவாமிகள் கரையூர்ப்பகுதியால் நடந்து போனபோது ஒரு கொட்டிலில் அழுகுரல் கேட்டது. அவ்வீட்டின் தலைவன்



(24 ஆம் பக்கம் பார்க்க)

# புரட்டாதியும் சனிக்கிழமை விரதமும்

கிழமை நாட்களைப் போல ஒவ்வொரு மாதமும் தனிப்பட்ட சிறப்புடையவை; இச் சிறப்பின் அடிப்படையிலேயே மாதங்களின் பெயர்கள் அமைந்துள்ளன.

## "புரட்டாதி" மாதம்

இது "பாத்திரபதம்" என அழைக்கப் படும். தீமைகள் எங்களை அணுகா வண்ணம் எங்கள் பாதுகாப்பு (பத்ரம்) நிமித்தம் நாம் சில குறிப்பிட்ட செயல்களைச் செய்ய வேண்டி யிருப்பதால் இப் பெயரிட்டனர் என்பர் அறிஞர். இம் மாதத்தில் வரும் விரதங்களும் வழி பாடுகளும் எங்களுக்கு மிகுந்த நலம் விளை விப்பவை.

1. மஹாளயபக்ஷம்
2. நவராத்திரி விரதம்
3. சனைச்சர விரதம்
4. கேதார கௌரீவிரதாரம்பம்

மஹாளய பக்ஷத்தில் மறைந்த பெற் றோர்களுக்கும் முன்னோர்களுக்கும் நாங்கள் செய்யவேண்டிய கடமையான பிதுருக் கடன் கள் செய்யப்படவேண்டும்.

நவராத்திரியில், வீரம், செல்வம், கல்வி என்ற அடிப்படையில் எல்லாம் வல்ல இறைச் சக்தியை வழிபடுதல் அதன் பூர்த்தியாக விஜய தசமியில் புதிய செயல், கல்வி முதலியவற் றைத் தொடங்குதல் செய்யப்படவேண்டும்.

நவக்கிரகங்களில் மிகவும் நன்மையும் தீமையுமான பலன்களைத் தரக்கூடிய "சனி" என்னும் கிரகத்தின் அருளைப் பெற சனிக் கிழமையில் வழிபடவேண்டும்.

உலக மாதாவின் தவமாகிய கேதார கௌரீ விரதத்தில் நாமும் பங்கு கொண்டு விரதம் இருக்கவேண்டும்.

## சனிக்கிழமை விரதம்

இம்மாதத்தில் வரும் சனிக்கிழமையன்று சனி பகவானை சிறப்பாக வழிபடுதல்.

"சனி"யை 'சனைச்சரன்' என்றே அழைப் பர். (சனீஸ்வரன் என்றழைத்தல் பிழை எனக் கூறுவர் அறிஞர்) சனி மெள்ளச் சஞ் சரிக்கும் (மந்தகதியில் செல்லும்) கிரகம். ஆகையால் இப் பெயர் ஏற்பட்டது (சனை: சரதி இதி சனைச்சர:) சூரியபகவானுக்கும் சாயாதேவிக்கும் புத்திரராக "சனி" தோன் றினர். சனிக்கிழமை அவருக்குரிய நாள். சனைச்சரன் சங்கர நாராயணவடிவம் என்று கூறப்பட்டுள்ளது. சனியிடம் பாதுகாப்புக் கட வுளின் அம்சமே மேலோங்கி நிற்பதால் ஸ்ரீ நாராயணுக்குரியதாகவும் சனிக்கிழமை விளங் குகிறது. சனியை வழிபட்டால் திருமாலை வழி பட்டபலன் உண்டு இந்த அடிப்படையிலேயே சனிக்கிழமைகளில் புராண இதிகாசபடனங்கள் நடைபெறும் வழக்கம் ஏற்பட்டதெனலாம்.

சனி ஆயுளுக்குரிய அதிகாரம் உடைய கிர கம். சனிக்குப் பிரியமான நிறம் கருப்பு. தானி யம் எள்ளு. வேள்விக்கெனப் பயன்படும் "வன்னி" — நீலநிறமுள்ள கருங்குவளைப்புஷ் பங்கள், நீலம் எனப்படும் இரத்தினம் இவை

எஸ். என். நடராஜன்

"சனி"க் குரியவை என வகைப்படுத்தப்பட் டுள்ளன. கருப்பு நிறமுள்ள ஆடையும் காக்கை வாகனமும் இவருக்குரியவை. சனிக் குரிய உலோகம் —இரும்பு; —சுவை — கைப்பு; திசை — மேற்கு.

## புரட்டாதிச்சனி

புரட்டாதி மாதத்தில் சூரியன் கன்னி ராசியில் சஞ்சிரிக்கிறார். அடுதத துலாராசி சூரியனின் நீசவீடு ஆகும் அதற்குச் செல்லு முன் தன் புத்திரரான 'சனியிடம்'' தன் பொறுப்புக்களில்கூடியவற்றைத்தற்காலிகமாக மாற்றிக் கொடுக்கிறார். சூரியனின் பிரதிநிதி யாக சனி இம் மாதம் செயற்படுகிறார். எனவே தான் இம் மாதத்தில் சனி வழிபாடு சிறப்புப் பெறுகிறது.

சனி பகவானைப் போற்றுவதால் நன்மையும், அவரை தீமை செய்பவர் என வெறுப்பதால் தீய பலனையும் நாம் அடைகிறோம்.

சனிக்கிழமை ''ஸ்திர'' வாரம் எனப்படும். அன்று தொடங்கப்படும் எந்த ஒரு முயற்சியும் நற்பலனைத் தரும். எனினும் சில மங்களகரமான காரியங்களுக்கு சனிக்கிழமை விலக்கப்பட வேண்டும். இதன் நோக்கம் அன்று சனியின் பலமே மேலோங்கி, மற்ற கிரகங்களின் பலம் குறைந்து விடும் என்பது தான். இராஜ்யாபிஷேகம், சத்திர சிகிச்சை கடனைத் திரும்பப்பெறச் செல்லும் பிராயணம் போன்ற சில நிகழ்ச்சிகளுக்குச் சனிக்கிழமையே சிறந்தது.

'சனி'யை அக்னிஸ்வருபமான ஜோதியின் மூலம் வழிபடுதல் உத்தமம். எனவே தான் எள்ளை கருப்புத்துணியில் முடித்து மண் சட்டியில் எண்ணெய் விட்டு அதில் வைத்துத் தீபமாக ஏற்றி அஞ்சலி செய்கிறோம்.

எள்ளில் உள்ள நுண்பொருளுக்கும் சனிக் கிரகத்திற்கும் தொடர்புண்டு என்பது உண்மை. எள்ளும் எண்ணெயும் எரிந்து அவற்றின் சிறுதுகள்கள் எல்லாம் சக்தியாக மாறி விண்வெளியிற் பரவி சனியின் நல்ல சக்தியை நாங்கள் பெற வாய்ப்புண்டாகும் என்பது முனிவர்களின் கூற்று.

3, 9, 27, 108 என்ற அளவில் நவக்கிரகங்களை வலம் வருதல் புரட்டாதிச்சனியில் விசேஷ நன்மை பயக்கும். புரட்டாதிச் சனியன்று ''அகண்ட பஜனை'' செய்தல் நன்று. திருமாலின் திருவுருவப்படத்தின் முன்பு திருவிளக்கேற்றி வைத்து புஷ்பங்களால் அலங்கரித்துப் பூஜை செய்து, நிவேதனங்களுடன் வழிபட வேண்டும்.

மஹான்களின் இறைபுகழாகவுள்ள பாடல்களையும் நாமாவளிகளையும் குழுக்களாகவும், தனித்தனியாகவும் இசையுடன் பாடி இறைவனுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும். சனிக்கிழமை உதயத்தில் ஆரம்பத்து ஞாயிறு காலை உதயம் வரை இடைவிடாது நடத்தி முடிக்க வேண்டும்.

வழிபாடு நடத்துவதற்கு உடலில் சோர்வு ஏற்படாதிருக்கும் வகையில், உணவை நீக்கியும், திரவமாக சொற்ப அளவில் ஏதாவது அருந்துதல் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மன ஒருமைப்பாட்டுடனும் தேக நிலை வசதிக்கேற்பவும் இந்த வழிபாட்டை அனைவரும் செய்து நலம் பெறுவோமாக.

# மகன்,...

( 18 ஆம் பக்கத் தொடர்ச்சி )

மந்தரையின் துர்ப்போதனையால் அறிவையும், அறநெறியையும், இராமன் மீதுள்ள பாசத்தையும் ஒருங்கேஇழந்துவிட்ட கைகேயி, ஆடை அணிகளை அறுத்தெறிந்துவிட்டு, நிலாமுற்றத்தில் தலைவிரி கோலமாகப் புரண்டு கொண்டிருந்தாள். கைகேயியின் தலைவிரி கோலத்தின் காரணத்தை அறியத் தவித்தார் தசரதர். அவரின் தவிப்பைத் தனக்குச் சாதமாக்கிக் கொண்டவள், ஆதியில் தனக்குக் கொடுத்த இரண்டு வரங்களையும் அப்பொழுது தரவேண்டும் என்று வேண்டி நின்றாள்.

மகிழ்ச்சியடைந்த தசரதர் வரங்களைக் கொடுக்க ஒப்புக்கொண்டதும் 'பரதன் முடி சூடி நாடாளவும், இராமன் பதினான்கு ஆண்டுகளைக் கானகத்தில் கழிக்கவும் வரம்வேண்டும் என்றாள். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டிய கடமையுடன், இராமனைப் பிரியும் துன்பத்தையும் தாங்கமுடியாத தசரதர் மூர்ச்சையடைந்து விட்டார். பிறர் கொடுத்த வரங்கள் இரண்டும் தடையின்றி நிறைவேற உதவுவதே தனது கடமையென உணர்ந்த இராமன் மரவுரிதரித்து மகிழ்ச்சியுடன் கானகம் செல்லுகிறான்.

தந்தையின் மகிழ்ச்சிக்காக மணிமுடியையும் மணவாழ்வையும் துறந்த காங்கேயரின் தியாகத்தை மகாபாரதத்திலும் -

பிதாவின் வாக்கைக் காப்பாற்ற இராச்சியத்தையும், சுகபோகங்களையும் வெறுத்துச் சீதாதேவியுடன் கானகம் செல்லும் இராமனை இராமாயணத்திலும் சந்திக்கிறோம்.

★

(21ஆம் பக்கத் தொடர்)

மீன்பிடிக்கப் போனபோது காற்றுப் பிசகால் கடலில் அலைந்து வழிதப்பி வீட்டுக்கு மீள வில்லை. அதனால் மனைவி மனமுடைந்து அழு ததை அறிந்த சுவாமிகள் வீட்டினுள் புகுந்து வளையிலிருந்த பனைமட்டையை எடுத்து நடு வீட் டில் நின்று கூத்தாடி "ஏலேயா ஏலலேலோ" என்று வலிப்பது போல் செய்தார்கள்.

அங்ஙனம் கூத்தாடிய பின் மட்டையை எறிந்து விட்டு அப்பாற் சென்றார்கள். அவ் வேளை மீனவன் வீட்டுக்கு மீண்டு, அங்கு நிலமெல்லாம் கிளறப்பட்டிருந்ததைக் கண்டு "இது என்ன?எனக்கேட்டான். அதற்குமனைவி இது உன்னுடைய பைத்தியம் கூத்தாடியது" எனக் கூறினாள். அதைக் கேட்ட மீனவன் உள்ளம் பூரித்து "என்னப்பன் அங்கே வள் ளம் வலித்த மாதிரி இருந்தது. இங்கேயும் இப்படியா? என்று கண்ணீர் ததும்பினான்.

சிலவேளைகளிற் கைநிறையக்காசு கொண்டு சுவாமிகள் பெரிய கடைத்தெரு வழியே விச ரன் போக்கில் ஓடுவார்கள் திடீரென்று சுவாமி கள் திரும்பி நின்று கையிலுள்ள காசை வீசுவார்கள். சிறுவர்கள் விழுந்தடித்து அவற்றைப் பொறுக்குவதைப் பார்த்து நின்று ஆனந்த நடனஞ் செய்வார்கள். சுவாமிகளு டைய திருவடிவப்பரிசம் பெற்று அவர் தம் நடன சுகத்தையும் அனுபவித்த பெரிய கடை வீதியும் பெருந்தவப் பேறுடையது.

கடைசிக்காலத்தில் சுவாமிகள் வண்ணை நீராவியடியில் நிலையாக இருந்தார்கள். அவர் களின் சமாதி நிலையும் அங்கேயே கைகூடியது. கர வருடம் புரட்டாதிமாதத்தில் பூரணையும், பூரட்டாதி நட்சத்திரமும் பொருந்திய புண் ணிய வேளையில் மகா சமாதியடைந்தார். அவ் விடத்திலேயே அன்பர்கள் பலரது பெரு முயற்சியால் சமாதிக் கோயில் ஒன்று எழுப்பப் பட்டு நித்திய பூசைவழிபாடுகள் மிகச்சிறப் பாக நடைபெற்று வருகின்றன.

-சுவாமிகள் நாமம் என்றும் வாழ்வதாக!

★

---

## இறைவற்...

(14 ஆம் பக்கத் தொடர்)

யது' இவ்வளவு காலமும் உங்கப்பா, உங் கப்பா என்று வேற்று மனிதரைக் குறிப்பிடு வது போலச் சொன்னாய் இப்பதான் மாமா என்ற உறவு தெரிஞ்சுதோ. அவர் உறவையே அறுத்தெறிந்து போட்டாரடி' என்று பொரி ந்து தள்ளினான்.

சந்திரனின் ஒவ்வொரு வார்த்தையும் அவளுக்கு நெஞ்சில் ஈட்டிபோல் குத்தியது. துக்கம் தாளாது 'அம்மா தாயே, அகிலலோக நாயகியே என்னை பிழையைப் பொறுத்தருள் தாயே' என்று நெஞ்சம் நெக்குருக அம்மனை வேண்டி குழந்தைபோல் அழுதாள்.

சந்திரன் அறையைத் திறந்து வெளியே வந்தான். இந்த இரவுநேரத்தில் எங்கே போகி றார் என்று எண்ணியவாறு அவனைப் பார்த் தாள். பேசப் பயமாக இருந்தது. சந்திரன் நேரே தகப்பன் படுத்திருக்கும் அறைக்குவந் தான். வெறுமையான கட்டிலைப் பார்த்ததும் துக்கம் நெஞ்சை அடைத்தது. மடத்தில், வெறும் நிலத்தில் படுக்கும்படி செய்துவிட் டேன் என்று எண்ணிய போது அவனுக்கு நெஞ்சே வெடித்துவிடும் போல் இருந்தது. வாய்விட்டுக் கதறி அழுதால் பாரம் குறை யும் போல் இருந்தது.

அந்தக்கட்டிலில் அமர்ந்து சலிப்புத்தீர விக்கி விக்கி அழுதான்.

விடிந்ததும் தகப்பனைப் பார்க்கப் புறப் பட்டான். கேற்றைத் திறக்கும் போது பின் னுக்கு யாரோ நிற்பது போன்ற உணர்வு தோன்றத் திரும்பிப் பார்த்தான். கிரிஜா மௌனமாக நின்றாள். சேலைகட்டி, தோஞ்ச ஈரத்தலையுடன், நெற்றியில் வீபூதிகுங்குமத் துடன் காட்சியளித்தாள்

இதற்கு முன் அவளை இந்தக் கோலத்தில் பார்த்ததாக அவனுக்குத் தோன்றவில்லை.

ஒன்றும் பேசாது அம்மன் கோயிலுக்குப் புறப்பட்டான். கோயில் மடத்தடியில் நடே சர் இருப்பதை ஏற்கனவே அறிந்திருந்தான்.

சந்திரனைப் பின்தொடர்ந்து கிரிஜாவும் போனாள். இருவரும் மௌனமாகச் சென்றார் கள்.

சந்திரன் அருகில் போய் 'அப்பா' என்று அழைத்தான்.

'என்ன சந்திரா' என்று வழக்கமாகக் கேட் கிறவர். இன்று 'அப்பனே' என்றார்.

'சொந்தமென்று வருவதெல்லாம் சொந்த மில்லை அப்பனே. துயர்கோடி வளர்ந்தோங் கும் காடு அப்பனே' என்றார்.

கிரிஜா முழங்காலில் நிலத்தில் அமர்ந்து நடேசரின் கால்களைத் தொட்டவண்ணம் சாமி என்று அழைத்தாள்.

சந்திரன் அருகில்வந்து 'வீட்டுக் கிணற் றடியில் இருக்கும் அம்மனுக்குப் பூசை செய்ய வேணும்' என்றான்.

'யாவர்க்குமாம் இறைவனுக்கொரு பச் சிலை அப்பனே. பூசையை நீயே செய். என்று சொல்லிவிட்டு மீண்டும் தியானத்தில் ஆழ்ந் தார்.

★

# செல்வச் சந்நிதியில் மௌன பூசை

கற்கோவளன்
(துவபகிரி சோதிடர்)

அன்னதானக் சுந்தன் என்று ஏழைகளாலும் செல்வந்தர்களாலும் அழைக்கப்பெறும் செல்வச்சந்நிதி ஆலயத்தில் செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும் தமிழர் பண்பாட்டினைப் பேணிப்பாதுகாக்கும் ஆச்சிரமங்களுக்கும் மடங்களுக்கும் குறைவேயில்லை.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றும் சிறப்புற்று விளங்குவதே ஒரு பிரசித்திபெற்ற ஆலயத்தின் சிறப்பம்சமாகும். இத்தகைய சிறப்பு செல்வச் சந்நிதி ஆலயத்திற்கும் உண்டு.

## தீர்த்தச் சிறப்பு

செல்வச் சந்நிதி ஆலயத்தின் தீர்த்தச் சிறப்பைப்பற்றிச் சொல்லவந்த பக்தர் ஒருவர் பின்வருமாறு கூறுகின்றார்:

'வட கிழக்கில் வருமருவி மலடு தீர்க்கும்
வண் கிழக்கில் வருமருவி வறுமை தீர்க்கும்
குடதிசையில் வருமருவி கொடுநோய் தீர்க்கும்
கூறும் வட மேற் கருவிமனக் குறைகள் தீர்க்கும்
திடமிகு தென் திசையருவி பகைமை தீர்க்கும்
தென் கிழக்குத் திசை தொடரும் சென்மம் தீர்க்கும்
வடக் கொடு தென் கிழக் கருவி மனநோய் தீர்த்து
மகாஞானப் பெரு வாழ்வு வழங்குமாதோ'

மிகவும் எளிய நடையிலே அமைந்துள்ள இப்பாடலில் அதன் தீர்த்தச் சிறப்பு கூறப்பட்டுள்ளது. செல்வச்சந்நிதி ஆலயத்தின் அட்டதிக்குகளிலும் தீர்த்தக் கிணறுகள் இருப்பதும் பக்தர்கள் தனியே ஒரு கேணியில் மட்டும் நீராடாது சகல கேணிகளிலும் நீராடுவதன் தத்துவம் மேற்காட்டிய பாடலில் இருந்து பெறப்படுகிறது.

இத்தகைய தீர்த்தச் சிறப்பு செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு உண்டு.

ஏனைய பிரசித்திபெற்ற சைவ ஆலயங்களுக்கு இல்லாத பூசைச் சிறப்பு இங்கே உண்டு. சைவ ஆகம, அனுட்டானங்கள் இங்கே இல்லை. வேதவித்தகர்கள் இங்கே பூசை செய்வதில்லை. இங்கேதான் அதன் பூர்வீக வரலாற்றின் பெருமை தெரிகின்றது. பூசை செய்வது எப்படியென்று தெரியாத கதிர்காமர் என்ற பக்தருக்கு அன்று கந்தப் பெருமான் பூசை செய்யும் விதம்பற்றிக் கற்பித்தவாறே இன்றும் அவர்கள் பரம்பரையினுல் பூசைகள் செய்யப்படுகின்றன.

இங்கிருந்து வைகுண்டம் எவ்வளவு தூரம்? என்று ஒரு ஞானியிடம் கேள்வி கேட்கப்பட்டது. கஜேந்திரன் என்ற யானையின் பிளிறலுக்கும் துரோபதையின் அவலக் குரலும் கேட்கும் தூரத்திலேயே வைகுண்டம் உள்ளது என்று பதில் வந்தது.

அவர்கள் வாயினுல் கூவி அழைத்த போது கூப்பிடு தூரத்தில் இருக்கும் கடவுள் நாம் மௌனத்தால் வழிபடும் போது எங்கிருப்பான். எம் மனத்துள்ளேயே இருப்பான். எனவே இறைவனை எம் மனத்துள்ளேயே அடக்கி வைத்திருப்பதற்கு ஒரேவழி மௌன வழிபாடேயாகும்.

ஞானம் முற்றிய நிலை மௌன நிலையேயாகும். இறைவன் நால்வருக்கு அறம் உரைத்த போது கல்லால மரத்தின் கீழ் சின்முத்திரை காட்டி மௌனமாகவே நின்றார். அங்கே வாய்ச் சொற்கள் பயன்படவில்லை.

நக்கீரர் இயற்றிய இறையனார் அகப்பொருள் என்ற நூலுக்குப் பொருள் உரைக்க சிறுவனாக வந்த முருகப் பெருமானும், மன முருகி மெய் சிலிர்த்து மௌனமாக நின்றாரேயன்றி வாய்ச் சொற்கள் எதுவுமே பேசவில்லை.

இவ்வாறு மௌன வழிபாட்டின் மகத்துவத்தை உணர்த்துவதாகவே செல்வச் சந்நிதி ஆலயம் மிளிர்கின்றது. அற்புதம் மிகுந்து விளங்குகின்றது. அதனுல் பக்தர்களும் நிறைந்து, காணப்படுகின்றனர்.

பக்தர்கள் மனதில் ஒரு கீறல்.

# ஆவின் பெருமை என்னே!

இந்துசமய இலக்கியமான வேதங்கள் முதலாக வடமொழி, தமிழ் ஆகியவற்றிலுள்ள இலக்கியங்கள் வரை ஒரே முகமாக பசுவைப் பெருமைப்படுத்தியுள்ளதைக் காணலாம்

பசுவைப் பெருமைப் படுத்திக் கூறும் மஹாபாரதக்கதை இது;

சயவனர் ஒரு மகரிஷி. 12 ஆண்டுகள் நீரில் வாசம் செய்து தவமியற்றினர். அவரது உடலைச்சுற்றி எல்லாப் புறமும் மீன்கள் கூட்டமாகத் தொற்றிக் கொண்டிருந்தன. மீன்பிடிக்கவந்த செப்படவனது வலையில் முனிவர் மீன்களுடன் சிக்கிவிட்டார். பல மீனவர்களின் உதவியோடு கரைக்கு வலையிலகப்பட்டவற்றைக் கொண்டுவந்தான் செம்படவன். இச்செயலின் போது வெகுவாரியான மீன்கள் இறந்தும் விட்டன,

வலையில் முனிவர் இருப்பதைக் கண்ட செம்படவன் பயந்து போனன். முனிவரும் கண்விழித்து நாற்புறமும் பார்த்தார். மீன்கள் இறந்திருக்கக் கண்டு கலங்கி வருந்தினர். செம்படவன் பயத்துடன், "சுவாமி! அறியாத்தனமாக தங்களை நான் வலைவீசிப் பிடித்துவிட்டேன். மன்னிக்க வேண்டும். தங்கள் கட்டளைப்படி நடக்கச்சித்தமாக இருக்கிறேன்'' என்று கூறினன்.

அதற்கு முனிவர் ''என்னையும் மீன்களுடன் உன் உடமையாக்கி விட்டதால், மீன்களை விற்பதுபோல் என்னையும் ஒருவருக்கு விற்றால்தான் நான் விடுதலை பெறமுடியும். எனவே என்னையும்விற்றுவிடு'' என்று கூறினர்.

செம்படவன் "முனிவரை விற்பதாவது? யார் வாங்குவார்கள்? என எண்ணித் திகைத்தான். இறுதியாக அந்நாட்டு மன்னனான நகுஷன் என்பவரிடம் போய் விபரத்தைக் கூறினன். நகுஷனும் சிறிதும் தாமதியாது, உரியபடி சென்று முனிவரை வணங்கி உபசரித்தான். அவரின் விருப்பத்தை வினவி அறிந்த அரசனும் ஒருகணம் திகைத்து விட்டான். பிறகு 1000 பொன்களைக் கொடுத்து முனிவரை வாங்குவதாகத் தெரிவித்தான்.

— ஹஸ்தம் —

முனிவர் அதைக்கேட்டு ''நான் ஆயிரம் பொன்தான் பெறுவேனு? சரியாக என் பெறுமதியைத் தீர்மானித்துச் செய்'' என உரைத்தார். மன்னன் 10000 பொன்கள் கொடுப்பதாகக் கூறினன். முனிவர் அதற்கும் மறுத்து, தன் பெறுமதியை சரியாக நிர்ணயிக்கும்படி கோரினர். இவ்விதம் 1 லட்சம் பொன்கள், இராஜ்யத்தில் பாதி எனப் படிப்படியாக பெறுமதியை உயர்த்திச் சொல்லிக்கொண்டு போக எல்லாவற்றையும் சரியில்லை என முனிவர் தள்ளிவிட்டு ''உன் அமைச்சர்களையும் புரோகிதர்களையும் கலந்தாலோசித்து சரியான பெறுமதியைக் கொடுத்து வாங்கும்படி கூறினர். நகுஷன் செய்வதறியாது கலக்கமுற்றார்.

அவ்வேளை அவரது மதிப்பைப் பெற்ற ''கவிஜாதர்'' என்ற முனிவர் மன்னனுக்கு ரகசியமாக "கன்றுடன் கூடிய பசுவைக்கொண்டுவந்துமுனிவரின் பெறுமதியாகக் கொடுத்து விடுங்கள். அதுதான் பொருத்தம்'' என்றுரைத்தார். மன்னனும் அப்படி பசுவைக் கொணர்ந்து ''இவற்றையே உங்களுக்குரிய பெறுமதியாக நான் கருதுகிறேன். இதைக் கொடுத்துத் தங்களை விடுவிக்கிறேன் என்றான்.

இதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்த சயவனர் மன்னனை நோக்கி ''எல்லையில்லாத பெறுமதியுடைய பசுவை எனக்கு ஈடாகக் கொடுத்துள்ளாய். பசுவுக்கு, அதுவும் கன்றுடன் கூடியதாக இருக்க, உலகின் ஒப்பான பொருள் எங்குமே கிடையாது. உனக்கு எல்லா நலன்களும் உண்டாவதாக'' என வாழ்த்தித் தன்னை மீட்டுச் சென்றான்.

★

நூல்:

## வட்டுக்கோட்டை விசுவேசர் மும்மணிமாலை

**ஆசிரியர்: பண்டிதர் க. மயில்வாகனனார்**
**விமர்சகர்: பண்டிதர் மு. கந்தையா (B. A)**

பிரபந்த உருவிற் சிவனைப் பாடுங்கலை, சைவநாயன்மார் காலத்திலேயே கருக்கொண்டுள்ளது. நாயன்மாருள் மூத்த முதல்வியாகக் கணிக்கப் பெறுஞ் சிவமூதாட்டி காரைக்காலம்மையின் திருவாலங்காட்டுத் திருவிரட்டைமணிமாலை, அனைத்துப் பிரபந்தங்கட்கும் முன்னோடியாய் அமையும். தொடர்ந்து சேரமான் பெருமாள் நாயனார், நம்பியாண்டார்நம்பி, பட்டினத்தடிகள் ஆகியோர் இத்துறைக்கு, வாழ்வும், வளமும் நல்கியுள்ளார்கள். எண்ணுக்கடங்க வராத சிவன் இலாவண்ணியங்களை, மாசறு பக்தியுணர்வால் எண்ணியெண்ணிப் பல்லாற்றானும் பன்னிப் பன்னிப் போற்றுதற்கு வாய்ப்பாக ஒன்றுக்கு மேற்பட்ட செய்யுட் பாணிகளைத் தொடுத்தியற்றி அந்தாதித் தொடையமைய முடிக்கும் அமைதி, பிரபந்தங்களுள் முக்கியத்துவம் பெறும் இரட்டைமணிமாலை, மும்மணிமாலை, நான்மணிமாலைகளாற் சிறப்பாகப் பேணப்பட்டு வந்துள்ளது.

சமீப காலத்திற் குமரகுருபர சுவாமிகளும், சிவப்பிரகாச சுவாமிகளும் இவற்றிற் புகுத்திப் பொலியவைத்த கருத்தினிமை, கற்பனைச் சுவைப் பக்திவளம், அனைத்துச் சைவத்தமிழ் உள்ளங்களுக்கும் பெருவிருந்தாகி இவற்றிற்கு நித்திய வாழ்வளிப்பன. இவைகளைப் படிப்போருள்ளத்திற் சங்கத்தமிழ் படிக்கிறோமோ பழகு தமிழ் படிக்கிறோமோ என்ற விசாரமே தலைகாட்டுவதில்லை. சங்கத் தமிழ்ச் சொற்கள் சொற்றொடர்கள் கூடப் பழகுதமிழ்ப் பாணிக்கிசைவாகக் குழைவது இவற்றில் நிறையவுண்டு.

இவற்றைப் பண்பறிந்து பேணிப் படித்துச் சுவைத்துப் பயன்செய்து கொண்ட பாரம்பரியம் நம்நாட்டுத் தமிழறிஞர் மரபு கண்ட விஷேசங்களில் ஒன்றாகும். பண்டிதர் மயில்வாகனனாரும் இப்பாரம்பரியத்தில் வந்தோரில் ஒருவர் என்னும் உண்மை புலப்படும் வண்ணம் விளங்குகின்றது. வட்டுக்கோட்டை விசுவேசர் மும்மணிமாலை.

வாரணாசியில் இருந்தாலென்ன வட்டூரில் இருந்தாலென்ன விசுவேசர் விசுவேசர்தான்; விசாலாட்சி விசாலாட்சி தான்; என்றிருக்கும் பண்டிதனாரின் பக்தி பிரபந்தம் முழுவதிலுங் கமழ்கின்றது. முன்னையோர் பாடல்கள் பல்லாயிரக் கணக்கில் இருப்பவும் பின்னையோரும் அவற்றின் பாணியிற் பாடிக்கொண்டிருப்பதேன்? என்பது பரவலாக நிகழும் ஒரு விசாரம் அது முற்றிலும் முன்னையோர் மொழிந்த பொருள் பின்பின் விளக்கமற்றுப் போய் விடாமல் பின்னும் பின்னும் புதுவிளக்கம் பெற வைக்கும் நோக்கம் பற்றியே யாதல் அறியத்தகும். அந்நோக்கில் பின்னையோர் பாடல்களும் பேணி உரிய விளக்கங் கொடுத்துப் போற்றப்பட வேண்டிய அவசியம் உண்டு.

இந்நோக்கிற் பண்டிதர் மயில்வாகனனாருடைய இப்பிரபந்தத்தின் சேவைத்தரம் போற்றல்பெறும்.

இப்பிரபந்தம் சரளமான நடையில் அமைந்து தொடர்ந்து படிக்க இதமூட்டும் வகையில் நயமாயிருக்கிறது உணர்ச்சி வளமுண்டு வட்டுக்கோட்டை இயல்வளஞ்சார்ந்த குறிப்புகளும் ஆங்காங்கு இடம்பெறுகின்றன. 21ஆம் பாடல் விசுவேசர் ஆலயத் தோற்ற வரலாறுரைத்தலும் 27 ஆம் பாடல் கோயிற் றிருப்பணி பற்றிக் குறிப்பிடுதலும் தலமகிமைக்கு இன்றியமையா அம்சங்களாகும்.

பண்டிதரின் ஆக்கம் நன்று பலன்பாடுள்ளது. பாராட்டற்பாலது.

★

# கோத்திரமுங் குலமுங்கொண்டு என்செய்வீர்?

உலகில் உள்ள எண்ணிறைந்த வேற்றுமைகள் எல்லாம் மனத்தில் உள்ள வேறுபாடுகளே.

மனம்மாறி அமைவதற்கேற்ப உலகக் காட்சிகளும் மாறி அமைகின்றன.

மனமானது ஒடுங்குகின்றபோது, உறுதியானதென்று எண்ணிய உலகு, மாயமாய் மறைந்து போகிறது.

நமது உலக அனுபவம் உள்ளத்தைப் பொறுத்ததென்பது தெளிவு.

மனத்தை ஒடுக்கி அழித்துவிடுவதுதான் ஆத்மசாதகனின் இறுதி இலக்கு. மனமானது அழிந்தபின் எதுமிஞ்சியிருக்கிறதோ அதுவே மெய்ஞ்ஞானம் ''ஆசாநிகளந் துகளாயின பின் பேசா அனுபூதி பிறக்கும்'' நிலையற்ற மனத்தைச் சார்ந்திருக்கும் வரை நாம் மெய்ப்பொருளைக் காண இயலாது. மனத்தை ஒழித்துவிடமுயல்பவரே செயற்கரியசெய்வார். அவரே பரமஞானி. மனத்தைத் துறந்தவரே துறவி.

நிலத்தின் பான்மைக்கேற்ப நீரின் இயல்பு வேறுபடுகிறது. நிலத்தின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த தன்மையினை நீரின் குணத்தால் அறியலாம், உவர்நிலத்து நீர் உப்புத்தன்மை கூடியதாகவும், சேற்று நில நீர் சவர் ஆகவும் காணப்படுகிறது. இதனுல் நல்ல நீர் செட்டநீர் என்று பெயராகிறது; மண்ணின் செழுமைக் கேற்பவும், கால நிலையின் கோலத்திற்கேற்பவும் கனியின் சுவை வேறுபடுகிறது. செம்பாட்டின் கறுத்தக் கொழும்பான் மாம்பழம் தனிச்சுவை. கோடைகாலவருக்கை தேன் கூழ். சாத்துக்குடித் தோடை கட்டிபட்ட கரும்பு.

நல்லாருடன் சேரும்போது. சான்றோருடன் பழகும்போது, அறிஞர் - மகான்களின் அறிவுரைகளைப் படிக்கும்போது கீழ்நிலை மனமும் மேனிலை அடைகிறது. எது எவ்வாருயினும் அகங்காரம் இருக்கும்வரை நல்லவை நிகழா, கிணற்றுக்கட்டில் அரசங் கன்று முளைக்கும், முகங் கழுவும்போது களைவோம். 2 - 3 நாட்களில் திரும்பவும்முளைத்துவிடும். கட்டை உடைத்தாயினும் வேருடன் முழுவதாக அகற்றுவிட்டால் திரும்பத் திரும்ப முளைக்கும்.

அகங்காரமும் இவ்வாறுதான்.

''சாத்திரம் பலபேசும்
சழக்கர்காள்
கோத்திரமுங் குலமுங்
கொண்டென் செய்வீர்
பாத்திரஞ் சிவ னென்று
பணிந்திரேல்
மாத்திரைக் குள்ளுருளும்
மாற்பேறேரே''

எனச்சாடுகிருர் அப்பர் சுவாமிகள் மனத்தை அழித்தே மெய்ப்பொருள் காணவேண்டியுள்ளது.

பிற உயிர்களிடத்திலே அன்பு வைத்தல் அருமையான வழி. ''அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின் அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே'' (திருமந்திரம்) தனது பொருளையும்—ஆற்றலையும் பிறருக்குப் பயன்படச் செய்தலும் உதவக் கூடியது. ஒழுக்கத்தின் நிலை நிற்றல் மனத்தை அங்கிங்கு ஓடவிடாது தடுத்து

**ச. கதிரவேலு**

வைக்கும். தவம், விரதம் என்பனவும் ஏற்ற வழி. கடினமான இரும்பை நெருப்பிலே காய்ச்சினுல் நாம் நினைத்த பிரகாரம் வளைக்கலாம் — வடிவமைக்கலாம். அதுபோல இவற்ருல் வலுப்படுத்தப்பட்ட மனம் அருட்டுறைக்குப் பயன்படக் கூடியது.

★

# கனவு

"கண்ணை நன்றாகத் திறந்து பார் தெரியும்" என்று பொதுவாக நாம் சொல்வதுண்டு.

ஒன்றை அலட்சியமாகப் பார்க்கும்போது கண்ணை மூடிக்கொண்டும் பார்த்து சிலவற்றை அறிந்து கொள்ள முடியும் என்பது இதில் வெளிப்படுகிறது. கண்ணை மூடிக்கொண்டு இரண்டு நிலைகளில் மட்டுமே செயல்கள் நடைபெற முடியும்.

ஒன்று உறங்காமலிருக்கும் போது. மற்றொன்று உறங்கும் நிலையில்.

உறங்கும்போது பலவற்றைச் செய்கிறோம் ஆனால் சிந்திக்கும் வெளிமனம் வேலை செய்வதில்லை. உள்மனம் எப்பொழுதும் செயற்பட்டுக் கொண்டே இருக்கும். இதனாலேயே உறங்கும்போதும் நாம் சில நிகழ்வுகளைக் காண்கிறோம் – செயற்படுகிறோம். அவற்றில் பங்குகொண்டு மகிழ்கிறோம்; துக்கப்படுகிறோம்; பயப்படுகிறோம். உறக்கம் கலைந்த பிறகு அவற்றைப் பெரும்பாலும் நினைத்துப் பார்க்கிறோம்.

உறங்கும்போது நிகழும் மேலே கூறப்பட்டவற்றையே "கனவு" என்ற பெயரிட்டழைக்கிறோம்.

"கனவும் நினைவும்" என்ற சொற்றொடர் கனவின் பொருளை விளக்குகிறதல்லவா!

நினைவு அற்ற நிலையே கனவு என்பது தெளிவாகிறது. (ஆனால் உள்மனம் எப்பொழுதும் செயற்பட்டுக் கொண்டிருக்கும்.)

எமது வாழ்க்கையில் நிகழ்வன பற்றியும் அனுபவங்களைப் பற்றியும் எமக்கு ஈடுபாடும் செயற்பாடும் எப்பொழுதுமே உண்டு. ஆனால் அதேபோல் நாம் காணும் கனவைப்பற்றியும் அவற்றின் மூலம் விளைவுகள் ஏற்படுமா என்பதைப்பற்றியும் அறிந்துகொள்ள நாம் ஈடுபடுவது இல்லை.

"கனவு என்பது ஒரு மனப் பிரமை" "முன்னர் ஏற்பட்ட ஒரு சிந்தனையின் பிரதிபலிப்பும் தொடர்ச்சியும்", "குழம்பிய மனத்தின் விளைவுகள்" எனப் பலவாறாக கருத்துக்கள் வெளியிட்டுள்ளார்கள்.

இந்திய அறிஞர்கள் கனவைப்பற்றிப் பெரும் ஆராய்ச்சி நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது. எம் முன்னோர்களாகிய முனிவர்கள் கனவின் ஆணிவேரை அறிந்தவர்கள் எனக் கூறமுடியும்.

கனவுகள் உண்மையிலேயே வாழ்க்கையின் பல்வேறு மர்மங்களைக் கண்டறிந்து கொள்ளப் பயன்படும் கருவிபோன்றது; உயிர் வாழ்வது பற்றிய மர்மமான ஒழுங்குமுறையும், இப்பொழுது வாழும் உயிர்களுக்கு முன் உயிர்கள் வாழ்ந்தனவா அல்லவா என்பதையும் அறிய இது துணை புரிகிறது.

## முற்பிறவி அனுபவம்

கனவில் கண்டவற்றில் சில எங்களது அனுபவங்களாயும், அபிப்பிராயங்களாயும், உள்ளக் கிடக்கையின் வெளிப்பாடுகளாயும், அபிலாஷைகள் தொடர்பாகவும் இருப்பதுண்டு.

**'மநு'**

மேலும் சில எங்கள் அநுபவம், வாழ்க்கை அநுபவங்கள் என்ற தொடர்பேயில்லாமலும் இருப்பதுண்டு.

பல புதிய மனிதர்கள், முன்பின் அறியாத பொருள்கள், இடங்கள், நிகழ்வுகள், சூழ்நிலைகள் என்பனவும் கனவில் காணப்படுவதுண்டு. அது மட்டுமன்றி அவை எமது அறிவாற்றலையும் கடந்ததாயிருக்கவும் கூடும். இவற்றுள் சில எமது முற்பிறவியின் அனுபவங்களாகவும் இருக்கலாம் வேறு ஏதாகவும் இருக்கும் என நாம் சொல்ல முடியும்.

கனவு மிகக் குறுகிய கால எல்லைக்குள்ளேயே நிகழ்கின்றது. ஆனால் அதில் காணும் நிகழ்ச்சிகள் பல நாட்கள் அல்லது அதற்கு

(31 ஆம் பக்கம் பார்க்க)

# தலபுராணங்கள்:-

கி. வா ஜகந்நாதன்

தமிழ் நாட்டில் தலங்களுக்குக் குறைவே இல்லை. ஆகையால் தல புராணங்களுக்கும் பஞ்சம் இல்லை. மிகச் சிறந்த தலங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட புராணங்கள் உண்டு. காப்பியத்தின் இலக்கணங்கள் அமையப் புராணங்களைப் புலவர்கள் பாடியிருக்கிறார்கள். திருகூடராசப்ப கவிராயர், கவி வீரராகவ முதலியார், சிவப்பிரகாசசுவாமிகள், பரஞ்சோதி முனிவர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை முதலியோர் தல புராணங்கள் பாடியிருக்கிறார்கள். பொதுவாகத் தல புராணங்களில் முதலில் தல வரலாற்றுச் சுருக்கமாகிய, பதிகம் இருக்கும். பிற்பாடு நாட்டுப் படலம், நகரப் படலம் அமையும். அவற்றிக்கு அப்பால் மூர்த்தி தீர்த்த, தல விசேடங்கள் இருக்கும். அவற்றின் பின் தலங்களின் வரலாறுகள் வரும்.

புராணங்களில் எந்த மூர்த்தியைப் பற்றிய கதைகள் வருகின்றனவோ அந்த மூர்த்திகளின் பிரதாபங்கள் மிகுதியாக இருக்கும். மற்ற மூர்த்திகள் அந்த மூர்த்தியை வந்து வழிபடுவதாகக் கதைகள் அமையும். சிவபுராணங்களாக இருந்தால் திருநீற்றின் சிறப்பு, உருத்திராட்சத்தின் மகிமை, வில்வத்தின் சிறப்பு, சிவாலய மேம்பாடு, பஞ்சாட்சரத்தின் பெருமை, முதலிய சிவசம்பந்தமான செய்திகள் மிகுதியாக இருக்கும். சிலவிடயங்களில் சாத்திரக் கருத்துக்களை நன்றாக அமைத்துக் காட்டியிருப்பார்கள்.

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களுடைய புராணங்கள் மிக்க புகழ் பெற்றவை. "அவர் புராணம் பாடும் புலவர்" என்று சிறப்பிக்கப் பெற்றவர். அவர் பாடிய புராணங்களில் நாட்டுப் படலம், நகரப் படலம் மிகச் சிறப்பாக அமைந்திருக்கும். சைவ சாத்திர உண்மைகளும் அங்கங்கே விரவி இருக்கும். நாட்டுப் படலத்தில் ஐந்து திணைகளை வர்ணிக்கும் போது, அவ்வத் திணைகளில் உள்ள தலங்கள் இவை என்று எடுத்துச் சொல்லியிருப்பார். இது சேக்கிழாருடைய முறையைப் பின்பற்றியது.

தமிழ் நாட்டில் இலக்கண இலக்கியத்தைப் பயின்ற புலவர்கள் புராணங்களையும் பயின்றார்கள். திருவிளையாடல் புராணம், திருக்குற்றாலத் தல புராணம், காஞ்சிப் புராணம், திருத்தணிகைப் புராணம், திருவானைக்காப் புராணம் முதலிய புராணங்களை நன்கு தெரிந்தவர்களையே தமிழ் நாட்டில் சிறந்த புலவர்கள் என்று கொண்டாடினார்கள்.

சங்க நூல்களுக்குப் பிறகு இடைக் காலத்தில் வழங்கிய புராணங்களுக்கு இருந்த மதிப்பு அளவற்றது. புராணத்தைப் பாடும் புலவனுக்கும் பெருமை, அதற்கு உரை எழுதுகிறவனுக்கும் பெருமை, அதனைப் படித்துத் தெரிந்து கொள்கிறவனுக்கும் பெருமை இருந்து வந்தது. தல புராணங்களிலுள்ள செய்திகள். யாவும் உண்மை வரலாறுகளா என்ற கேள்வியைச் சிலர் எழுப்பலாம்.

"பொய்மையும் வாய்மை
யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்பது வள்ளுவர் வாக்கு. பொய்யான கற்பனை வரலாறுகளாக இருந்தாலும் அவற்றில் நாம் உணரவேண்டிய சிறந்த கருத்துக்கள் இருக்குமானால் அவற்றையும் மெய் நூல்களாகவே கொள்ளவேண்டும்.

## பக்தி உணர்வு

அந்த வகையில் பக்தியை மிகுதியாக ஊட்டுவதற்கும் தல புராணங்கள் பயன்படும். மற்றொரு சிறந்த பயனும் உண்டு. உலகம் முழுவதும் இறைவனுக்குரிய கோயில். அவன் இல்லாத இடம் ஒன்றும் இல்லை; எங்கும் அவன் நிரம்பியிருப்பதை நாம் காண முடியாது. சிவஞானம் பெற்றவர்கள், பார்க்கும் இடம் எங்கும் பரிபூரண ஆனந்தமாகிய இறைவனைக் காண்பார்கள். நாமோ அவ்வாறு காண முடியாது. ஆனாலும் அவனை மறவாமல் இருக்க நாம் காணும் பிரபஞ்சத்தை அவனை நினைப்பதற்குரிய அடையாளப் பொருள்கள் நிரம்பியதாகப் பார்க்கும் வகையில், நமக்குப் பயிற்சி தந்திருக்கிறார்கள் உலகத்தை சிவமாகப் பார்க்க முடியாவிட்டாலும் உலகப் பொருள்களில் எல்லாம் சிவனைப் பற்றிய எண்ணத்தை ஊட்டும் வரலாறுகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் மரமும் மலரும், ஆறும், குளமும் தலங்க

ளும் கடவுளை நினைப்பூட்டுவதாக அமைந்திருக்கின்றன.

தமிழ் நாட்டு ஊர்களில் பெரும்பாலானவற்றைப் பார்த்தால் இறைவனுடைய சம்பந்தமுடைய பெயர்களை உடையனவாகத் தெரியவரும் ஊர்களில் பல மக்கள் குடியிருந்தாலும் அங்கே உள்ள திருக்கோயிலில் உள்ள மூர்த்தியின் பெயரில் அந்த ஊருக்குப் பெயர் அமைந்திருப்பதை உணரலாம்.

நாம் காணும் பொருளில் எல்லாம் இறைவனுடைய ஞாபகத்தை உண்டாக்கும் தொடர்பு இருக்க வேண்டும். நாயைக் கண்டால் இறைவனை நினைக்க வழி இருக்கவேண்டும். வண்டைக் கண்டாலும், கழுதையைக் கண்டாலும், பாம்பைக் கண்டாலும், இறைவனுடைய நினைவு வருவதற்கு ஒரு வழி உண்டு. தல புராணங்களை நன்கு உணர்ந்தவர்கள் அந்தவழியை உணர்வார்கள். இந்தத் தலம் பாம்பு பூசித்தது, இந்தத் தலம் கழுதை பூசித்தது, இந்தத் தலம் வண்டு பூசித்தது என்று வரும் தல புராணக் கதைகளை உணர்ந்தவர்கள் பாம்பைக் காணும் போதெல்லாம் பாம்பு பூசித்த தலம் அவர்களுக்கு நினைவு வரும். வண்டைக் கண்டால் அது பூசித்த தலத்தின் நினைவு வரும். அந்த நினைவோடு சேர்ந்து இறைவனுடைய பல எண்ணங்கள் மனதில் தோன்றும். ஆகவே தல புராணங்களில் நாம் காணும் பிராணிகளை இறைவனோடு தொடர்பு உடையனவாக எண்ணச் செய்து நமக்கு இறைவனுடைய நினைப்பை ஊட்டும். அடையாளப் பொருள்களாக்க உதவுகின்றன. இப்படி சிவ பக்தியை வளர்க்கத் தல புராணங்கள் நமக்குப் பயன்படுவது ஒரு கருத்து.

**இலக்கியச் சுவை**

வரலாற்று முறையிலும் தல புராணங்களுக்கு ஒரு சிறப்பு உண்டு. தமிழை நன்றாக வளர்த்த புலவர் பெருமக்கள் தங்கள் புலமையைக் காட்டிப் புராணங்களை இயற்றினார்கள். ஆகவே கடவுளைப் பற்றிய உணர்ச்சி இல்லாதவர்கள் தமிழின் சுவையைத் தேர்ந்து கொள்வதற்குப் புராணங்களைப் படிக்கலாம். விவிலிய நூலின் நடைக்காகப் பிறர் அதைப் படிப்பதைப் பார்க்கிறோம். அப்படியே மில்டன் எழுதிய சொர்க்க நீக்கத்தைச் சமய நூல் என்று பாராமல் காப்பியம் என்று பார்த்து இன்புறுகிறார்கள். அவ்வாறே புராணங்களை அநுபவிக்கலாம்.

★

---

(29 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்பட்ட கால எல்லைக்குள் நடந்ததாகவும் இருக்கக்கூடும்.

இளஞ்சிறுவர்கள் சிறுமிகள் சில வேளைகளில் மிகவும் விரைவாகத் தங்கள் முற்பிறவிகளைப்பற்றி எதிர்பாராது நினைவுகொண்டு கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். ஆனால் மிகவும் விரைவாக அவர்கள் மனதைவிட்டு அந்த நினைவு மறந்திருக்கிறது.

**வருங்காலம்**

கனவில் சில வருங்கால நிகழ்ச்சிகளும் வருவது உண்டு என்பதையும் இங்கு கூறுவது பொருத்தமாகும்.

கௌதம புத்தரின் தாய் ஓர் அதிசயமான கனவு கண்டதாயும் அதன்படி விண்ணிலிருந்து ஒரு நட்சத்திரம் விழுந்து அது அவரது உடலில் பிரவேசித்து மறைந்ததாம். பின்னர் அந்த அறைமுழுவதும் மிகவும் பிரகாசமடைந்து காணப்பட்டதாம். பின்னர் இக்கனவுபற்றி சோதிடர்களிடம் மன்னர் வினவியபோது அவர்கள் உலகத்தில் புகழுடன் விளங்கப்போகும் ஒரு சமயாசாரியனாகக்கூடிய புத்திரனை இராணி பெறுவாள் எனக் கூறினாராம். புத்தர்பிரானின் பிறப்புப்பற்றிய வரலாறு இதுவாகும்.

வருங்காலத்தையும் கனவு தொடர்பு கொண்டதாக உள்ளது உண்மையே. 'கனவின் பலன்' என்ற நூல்கள் பல எழுதப்பட்டுள்ளன.

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கனவு கண்டால் அதில் காணப்பட்டவை அப்படியே நிகழும் என்னும் நம்பிக்கை மக்களிடம் இருக்கிறது. அது ஓரளவு உண்மை எனக் கூறமுடியும். மனம் என்பது உயிர் உள்ள உடலில் தான் இருக்கமுடியும். உயிரின் இயல்பு என்ன என வரையறுக்கமுடியாத நிலையில் உள்ளது. வள்ளுவர் வாக்கு 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்பது உயிர்களின் தன்மை இதில் ஒருவகைப்பட்டது என்பது தெளிவாகிறது. உயிர்களின் இயல்பு தொடர்ச்சியாக உள்ளது என்று நாம் அறியலாம்.

முன்வினைப்பயனை உயிர்கள் அனுபவித்தே தீர வேண்டும். இப்பிறவியின் வினைப்பயனை அடுத்த பிறவியில் அனுபவிக்க வேண்டும். இது பொதுவான நியதி என்பது தெரியும். எனவே உயிருக்கு முற்காலத்தின் தொடர்பும் உண்டு என்பது பெறப்படுறதல்லவா?

காணப்படும் கனவுகள் நன்மையையும் தீமையையும் சிற்சில நேரங்களில் உண்டாக்குவதாக 'சொப்பன சாஸ்திரம்' கூறுகிறது.

★

# கீரைவகை தேடிச்சமை

சறு . சொக்கலிங்கம்

கீரை வகையில் மூன்று சத்துக்கள் உள்ளன. அவையாவன உப்புச்சத்து, உலோக சத்து, உயிர்ச்சத்து ஆகியன கீரை வகையில் அடங்கியுள்ளன. கீரைகளின் உயர்வை சங்க காலப் புலவர்கள் வெகுவாகப் போற்றியுள்ளார்கள். புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களில் பலவித கீரை இனங்கள் கூறப்பட்டுள்ளன.

கீரைகள் பொதுவாக குளிர்ச்சியைத் தருவன. சமிபாட்டை உண்டாக்கி மலத்தை இளக்குவன சிறுநீரை செவ்வனே கழியச் செய்வன. இரத்தத்தைச் சுத்திசெய்து குருதி ஓட்டத்திற்கு உதவுவன.

மூலநோய், சுவாசகாசம், குட்டம், பித்தம் முதலியவற்றை நீக்குவன. சட்டி, காய்ச்சல் முதலியவற்றைப் போக்குவன. உடலில் உண்டாகும் புழுக்கள் பூச்சிகளைக் கொல்வன அமிலங்கள் காரணமாக உள்ளூறுப்புக்களில் உருவாகும் கற்களைக்கரைப்பன. குடல்அழற்சி, பொருமல் முதலியவற்றை நீக்குவன. இருமல் தும்மல், நாவரட்சி, வாந்தி வலி முதலியவற்றைப் போக்குவன. தோலில் உண்டாகும் சொறி சிரங்கு, படைக்கரப்பான் முதலியவற்றைப் போக்குவன. சூட்டைத் தணித்து கண்பார்வையை துலக்கி குரல் தொனியைத் தந்து நினைவுச் சக்தியை அதிகரித்து உடம்பை அழகாக்கி வாழ்வை அளிப்பன.

கீரை இனங்களில் முளைக்கீரை, தண்டுக்கீரை, அரைக்கீரை, சிறுகீரை, பண்ணைக்கீரை, பூக்கீரை, குப்பைக்கீரை, முட்கீரை' சிவப்புக்கீரை, ஆரைக்கீரை, வேளைக்கீரை, கலவைக்கீரை, கோழிக்கீரை, துடுப்புக்கீரை. பருப்புக்கீரை புளிச்சற்கீரை, பூடிக்கீரை, முள்ளிக்கீரை, வெள்ளைக்கீரை, மல்லிக்கீரை, வெந்தயக்கீரை, மணற்தக்காளிக்கீரை, குப்பைமேனி, முசுமுசுக்கை, தூதுவளை, வல்லாரை, பொன்னாங்காணி, நிமித்தி என்னும் சிங்களகீரை, முல்லை, முசுட்டை, காரை பிரண்டை, குறிஞ்சா, கோவை, புதினா மூக்கரட்டை பொன்னாவரை, முருங்கை, இலைக்கோஸ், முட்டைக் கோவா, அகத்திஇலை, கறிவேப்பிலை, முதலியனவும் கீரை இனங்களேயாம்.

ஆகவே யாரை மறந்தாலும் கீரையை மறவாதே!

# இணுவில் பதியில்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர் பயில வேண்டும் என்பதாகும். தொழிலுக்கு எழுத்து மூலமான கல்வி அவ்வளவு அவசியம் இல்லை எனக் கருதப்பட்டமையாலும் தற்போது மிகுதியாக வாய்மொழி மூலமான பயிற்சியை அளித்து பரீட்சை நடத்தப்படுகிறது.

குரு-சிஷ்ய முறைப்படி தற்போது மூன்று பிள்ளைகள் இங்கு தங்கி இருந்து பயிற்சி பெறுகின்றனர். அவர்களுக்கு காலை வேளையில் வேதாத்யேனம், சமஸ்கிருத தோத்திரங்கள், சகஸ்ரநாம பாராயணங்களும், மாலை வேளைகளில் சப்தசதீஸ் பாராயணம், சமஸ்கிருத பாஷை போன்றனவும் பயிற்றுவிக்கப்படுகின்றன. மத்தியான வேளையில் சுமார் இருபது பிள்ளைகளுக்கு பிராமணத் தொழில் பார்ப்பதற்கேற்ற வகையில் தொழில் ரீதியான குறுகிய காலப் பயிற்சியினை பிரம்மஸ்ரீ. தா. ஹரிஹர சுப்பிரமணியக் குருக்கள் நடாத்தி வருகின்றார்.

ஆசாரியாபிஷேகம் செய்யப்படும் குருகுல மாணவர்களுக்கு 'சிவாச்சாரிய அபிஷேக சான்றிதழ்'களும் வழங்கப்படுகின்றன.

பிராமணச் சிறுவர்களை அவர்களின் பெற்றோர் விரும்பும் பட்சத்தில் ஏழுவயதில் என்னிடம் ஒப்படைத்தால். அப்பிள்ளைகட்கான சகல செலவுகளையும் ஏற்றுபதினொரு வயது வரை (5 ஆண்டுகள்) குரு-சிஷ்ய முறையில் அவர்களுக்கு சமஸ்கிருத அறிவு, கோவில் கிரியைகள் போன்றவற்றில் பயிற்சி அளித்து, உபநயனம், தீட்சை போன்றவற்றை முறைப்படி நடாத்தி வைப்பதற்கு ஆவல் கொண்டுள்ளேன். என் ஆயுள் காலம் வரை இதனை ஒரு சேவையாக விருப்புடன் செய்ய முன்வந்துள்ளேன்.

இப்படி அதிபர் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் ஞானக்கதிர் மூலம் வேண்டுகோள் விடுக்கிறார்.

# அர்ச்சுனா

கல்வி – முயற்சி – பெருவாழ்வு



## சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளின் ஆளுமையை விருத்தி செய்ய விரும்புகிறீர்களா?

'அர்ச்சுனா' வாங்கிப்பரிசாக மாதந் தோறும் வழங்கவும்.

உங்கள் பகுதி உதயன் முகவர்களிடம் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்

**விலை ரூபா 5/- மட்டுமே.**

**ஆண்டுச் சந்தா ரூபா 70/-**

தபாலில் பெற விரும்புவோர் இத்தொகைக்குக் காசுக்கட்டளை/காசோலை பெற்று நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட் என்று எழுதி,

நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட் த. பெ. எண் - 23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பில்:

**எஸ். ஜி. சி. டீம்**
61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு 4.

இந்து சமய மாத மஞ்சரி ஞானக்கதிர் நியூ உதயன், பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் 15, 2வது ஒழுங்கை மின்சார நிலைய வீதியில் உள்ள அவர்களது அச்சகத்தில் வெளியிடப்பட்டது.

# கூர்ந்து
# கவனியுங்கள்!

## 'ஷப்ரு'வின்

★ மாதாந்த சேமிப்புத் திட்டம்

★ உங்கள் குழந்தை வளரும் போதே உங்கள் சேமிப்பு வளர்வதை உறுதி செய்யுங்கள்.

★ மாதாந்தம் சிறு தொகை சேமித்து குறுகிய காலத்தில் பெருநிதி பெறும் திட்டம்

★ உழைக்கும் போதே சேமிக்கும் திட்டம்.



## இன்றே நாடுங்கள்

| | 1 வருடம் | 2 வருடங்கள் | 3 வருடங்கள் |
|---|---|---|---|
| ரூபா | 12% | 14% | 16% |
| 100/= | 1,280.93 | 2,783.41 | 4,643.27 |
| 200/= | 2,561.86 | 5,566.82 | 9,286.54 |
| 300/= | 3,842.79 | 8,350.23 | 13,929.81 |
| 400/= | 5,123.72 | 11,133.64 | 18,573.08 |
| 500/= | 6,404.65 | 13,917.05 | 23,216.35 |
| 600/= | 7,685.58 | 16,700.46 | 27,859.62 |
| 700/= | 8,966.51 | 19,483.87 | 32,502.89 |
| 800/= | 10,247.44 | 22,267.28 | 37,146.16 |
| 900/= | 11,528.37 | 25,050.69 | 41,789.43 |
| 1000/= | 12,809.30 | 27,834.10 | 46,432.70 |

# ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

*61, நியூ புல்லர்ஸ் வீதி,*
*கொழும்பு - 4.*
*தொலைபேசி: 589310, 500576.*

*207, மின்சார நிலைய வீதி,*
*யாழ்ப்பாணம்.*